84 984

Regd. No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

JAGANMOHINI

மாதாந்த நாவல் சஞ்சிகை

மலர் 10	1933ஆ ஏப்ரல் மீ	இதழ் 5

தனிப் பிரதி விலை உள் நாடு அணா 2 வெளி நாடு அணா 3

27 MAY 1933

உன் கையில் என்ன தடி?

லக்ஷ்மி:—உன் கையில் என்ன தடி? என்ன புத்தகம் அவ்வளவு ஸ்வாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருக்கிறாய்?

பாரதி:—சென்ற இதழில் "சோதனையின் கொடுமை அல்லது செல்வமே சொர்க்கம்" எனும் புதிய நாவலைப் பற்றிய விளம்பரத்தைக் கவனித்தாயோ இல்லையோ? நவரஸங்களும் ததும்பிய அந்த புத்தகம் தான் இது.

லக்ஷ்மி:—என்ன! அது வெளிவந்து விட்டதா? இப்படிக் கொடு: நான் படித்துவிட்டுத் தருகிறேன்.

பாரதி:—அது முடியாது; நம்மைப் போன்ற ஒரு பெண்மணி எழுதுவதை நாமெல்லோரும் ஆதரிக்காது, நான் வாங்கியதை நீ படிப்பதும், உன்னிடமிருந்து பிறர் வாங்கிப் படிப்பதுமாக விருந்தால் அவர்களுக்கு எப்படி ஆதரவுண்டாகும்? நீ இன்றே மணியார்டர் செய்து ஒரு புத்தகம் வாங்கிக் கொள்.

... நீ சொல்வது வாஸ்தவந்தான் பாரதி! நான் இன்றே ...ன்.

JL 2411, N24 J14 N33·10·5 21004

"... மோகினி" ஆபீஸ்,
... தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

ஒரு அரிய சந்தர்ப்பம்

இனி ஸ்திரீகளும்

இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கின்றது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப் படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்ற தென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

சுகுமாரன் தான் பார்த்துவிட்டு உடனே செல்லவேண்டியவ னயிற்றே என்பதை அடியோடு மறந்தான். திலகவதி "நான் கள்ளியல்ல; கபடியல்ல." என்று கூறுவதைக் கேட்ட சுகுமார னுக்கு அம்மொழிகளால் பற்பல யோசனைகள் தோன்றி வருத்தின. கணபதி அருகிலேயே நிற்பதால் தன்னுடைய உணர்ச்சிகளை வெகு ஜாக்ரதையாக அடக்கிக்கொண்டு சாமர்த்தியமாய் நின்றான். அவ னுடைய மனே நிலைமையோ கூறத்திறமன்று. பரிதாபகரமாய்ப் படுத்திருக்கும் திலகவதிக்கு அப்போதே சற்று ப்ரக்ஞை தெளிய வாரம்பித்ததாகையினல் அவள் தன்னுடைய மாருட்டமான வார்த் தைகள் சொல்லும் நிலைமையில் கண்ணைத் திறந்து பார்த்தாள்; உடனே மூடினாள். இவ்விதம் இரண்டு தரம் செய்தாள்.

அவ்வாறு "கள்ளியல்ல; கபடியல்ல." வென்று கூறும் கருத்தை யறியாத சுகுமாரன் கணபதியை நோக்கி "ஐயா! ஏன் இந்த அம்மாள் இவ்விதம் பிதற்றுகின்றார்கள்? 'கள்ளியல்ல, கபடி யல்ல' என்பதற்குக் காரணம் என்ன?" என்றான்.

கணபதி:—(அவனிடம் உண்மையைக் கூற அஞ்சி) ஐயா! இவ ளுக்கு நேற்று முதல் அபாரமான ஜுரங் கண்டு ஜன்னி பிறந்துவிட் டது. அந்த ஜன்னியின் வேகத்தினல் ஏதேதோ தாறுமாருகப் பிதற்றிக்கொண்டே இருக்கிறாள். இதற்கெல்லாம் காரணம் ஏதய்யா?

சுகுமா:—நான் தினம் இவ்விதம் வீடு வீடாகச் சுற்றிப் பார்க் கிறேன். அங்கு அம்மைக்கு ஜுரம் வந்தால் அசாத்யமாகப் பிதற் றலும், அலற்றலும் உண்டாகித் தடபுடல் படுகின்றது. அவ்வாறு அம்மை ஜுரமாக விருக்குமோ என்று சந்தேகமாகவே இருக்கிறது. இருக்கட்டும் பாதகமில்லை. அம்மை வந்தால் அது பெருத்த கஷ் டம். வீட்டிலேயே இருந்தால் நமது இந்து தர்ம வழக்கப்படிக்கு இளநீர் முதலியன அந்த தேவதைக்குப் படைக்கலாம். ஆஸ்பத்தி

ஒரு நூலாசிரியரைக் கேட்டு இனும் புத்தகம் வாங்கும் பேர்வழிகள் ஒவ்வொரு தடவையும் "உன் ஞாபகார்த்தமாக ஏதாவது புத்தகம் கொடு" என்று கேட்கிறார்கள். இதுவும் ஒரு பெரிய தந்திரமல்லவா?

 210041

ரிக்குக் கொண்டுபோய் விட்டால் வீட்டில் தினம் மருந்து கொட்டுவார்கள். அம்மை குத்தச்சொல்வார்கள். எத்தனையோ உபத்திரவம் உண்டு. எதற்கும் ஜாக்ரதை வெகு முக்கியம்.—என்று இவன் பேசிக்கொண்டே இருக்கையில் அங்கச்சியம்மாளின் குழந்தைகள் ஒன்றோடொன்று அடித்துக்கொண்டும் சண்டையிட்டுக்கொண்டும் கீழே உருண்டு விழுந்து, அடி பட்டு விபரீதமாகக் கத்த வாரம்பித்துவிட்டன.

இதைக் கண்ட கணபதி தொந்தி குலுங்க ஓட்டமாக ஓடி குழந்தைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டான். அவ்வாறு அவன் சென்றதால் சுகுமாரனுக்கு மனத்தில் களிப்பு பொங்கிவிட்டது. அவன் கண்ணைச் சற்று திறக்கும் திலகவதியைக் கண்டு மெல்லிய குரலில் “கஸ்தூரிபாய்! இதோ! என்னைப் பார். நான் யார் தெரிகிறதா! சிறைச்சாலைக்குள் என்னைத் தேடிக்கொண்டு பார்க்க வந்தனையே! நான் விடுதலை யாகிவிட்ட பின்னர் நாம் சந்திக்க சந்தர்ப்பமே வாய்க்காதொழிந்ததே!

இவர்களிருக்குமிடத்திற்கும், குழந்தைகளுக்கு அடிபட்ட இடத்திற்கும் வெகு தூர மிருப்பதாலும், அங்கச்சியம்மாளும் கணபதியும் தலையில் அடிபட்டு ரத்தம் வழியும் குழந்தைக்கும், வாயில் அடிபட்டு பல் பொத்தி ரத்தம் வழியும் குழந்தைக்கும் மருந்துகள் போட்டுச் சமாதானம் செய்து கொண்டிருப்பதாலும் சுகுமாரன் தைரியத்துடன் அங்கு அருகிலிருந்த ஜலத்தினால் திலகவதியின் கண்ணைத் துடைத்தான். திலகவதியின் கண்கள் கோவைப்பழம்போலவிருக்கின்றன. கண்ணைத் திறக்கையில் சுகுமாரன் கூறிய மொழிகள் அவள் செவியில் விழுந்தன. அது கனவு போலவும் தோற்றியது. தன் கண் முன்பு ஒரு மனிதன் நிற்பதை அப்போதே உணர்ந்தாள். அவனை சுகுமாரன் என்று கண்டுகொள்ள முடியவில்லை. சுகுமாரன்

கணவன்:—அடீ! நீ இவ்விதமெல்லாம் இருந்தால்—செய்தால்—இனி நான் நினைத்துள்ளபடிச் செய்ய வேண்டியதுதான்.

மனைவி:—ஓகோ! நீங்கள் என்ன செய்யத் தீர்மானித்து விட்டீர்கள்?

கணவன்:—என்னவா! உனக்கு அடங்கி கைகட்டி நடப்பதுதான்.

27 MAY 1933

தன் தலையிலிருந்த ஹாட்டை எடுத்தான். ஒட்ட வைத்துக்கொண்டிருந்த மீசையையும் எடுத்துவிட்டு "கஸ்தூரிபாய்! சந்தேகப்படாதே; நான் யார் என்று வெளியில் கூருதே" என்ருன்.

திலகவதி சற்று கவனித்துப் பார்த்தாள் "ஆ!......தா...ங்...க...ளா......சு...கு......மா......ர......ஞ! உ......ண்...மை...யி..லா......ஐ......யோ......நா...ன்......எ......ங்....கு......இ...ரு...க்கி......றே......ன்......த...ங்...கள்......வீ......ட்......டி......லா:......கா...ப்......பு......கி......டை......த்....த......தா......என்னை......வ......ன்......தா....ங்.....கள்......கொ...ண்...டு...போனீ......ர்......க......ள்......எ......ன்...மா...மி...மா...ம...னு...க்......கு...த்...தெ...ரி...ந்...தா...ல்...எ...ன்......னை......க்...கொ......லை......செ......ய்......து......வி......டு......வார்....க....ளே:...எ......ன்......னை......எ......ன்......வீ......ட்......டி......ல்......கொ......ண்......டு......வி......ட்......டு......வி......டு.....ங்......க......ள்......என்று பேசமாட்டாமல் இழுத்து இழுத்துப் பேசினுள்.

இதைக் கேட்ட சுகுமாரனது கண்களில் நீர் மளமளவென்று வந்துவிட்டது. அதைத் துடைத்துக்கொண்டு "கஸ்தூரிபாய்! நீ வீணுக பயப்படாதே! உன்னுடைய வீட்டிலேயேதான் நீ இருக்கிருய்! உன்னை நான் கொண்டுபோகவில்லை. நான் எத்தனையோ தந்திரம் செய்து உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன். அவர்கள் வந்துவிடப்போகிருர்கள். நான் இன்னுனென்று தெரிவித்துக்கொள்ளாதே! உனக்கு உடம்பு தேவலையா?...அதோ அவர்கள் இவ்விடம் வருவார்கள் போல விருக்கிறது. நாளைய தினம் வேறு எந்த விதமாக

தாயார்:—உன்னை நான் பத்து மாதம் சுமந்து பெறவில்லையா! என்னை இவ்விதம் திட்டலாமா! நான் தாயார் என்கிற அன்பு இல்லையா?

மகன்:—அம்மா! பத்து மாதம் உன்னிடமிருந்த ஓர் சுதந்திரத்தினுல் தான் உன்னை சகஜமாகத் திட்டுகிறேன். இவள் (மனைவி) ஊரார் வீட்டுப் பெண்தானே! இவளை நியாய விரோதமாகத் திட்டலாமா? மரியாதையாக இருப்பதுதான் தருமம்.

வாவது வந்து உன்னைப் பார்க்கிறேன்!" என்று கூறிக்கொண்டே ஹாட்டைத் தலையில் மாட்டிக்கொண்டான்.

மீண்டும் திலகவதி தட்டித் திணறிப் பேசத்தொடங்கி, "ஐ...
யோ!...தா...ங்...க...ள்...வ...ர...வே...ண்டா...ம்......தா......ங்
...க...ள்...எ...ன்...னை...எ...வ்...வி...தம்......நே...சி...க்...கி...
றீ...ர்...க..ள்...எ......ன்...று....நா....ன்....அ...றி....கி....றே....ன்.
....நா....ன்...ம...கா..கொ....டி...ய...பா....வி....எ...ன்....னை....த்
....தா....ங்....கள்...கா....த ...லி....க்....க...வே...ண்...டா...ம்.....அ
....து... ப...ய...ன...ற்....ற...தா....கி....வி....டும்...எ....ன்...னா....ல்
...தம....க்....கு...ஆ....பத்....து......நே...ரா...ம...,லி...ரு...ந்...தா
...ல்...போ...து...ம்.... இ...ங்....கி....ரு....ப்....ப...வ...ர்...க...ள்
....ம....னி .. த...ர்...க...ள...ல்...ல...அ...த...ற்...கு....ரி...த...ர்
...ச...னம்....என்...காலை....ப்...பா....ர்....த்...தா....ல்.... தெரி....யு
...ம்....அன்....ப...ரே.......த....ப்....பி....த....மா....ய்....அ.....ழை
....த்...து...வி...ட்....டே...ன்...ம...ன்..னி...க்....க...வு....ம்....நீ....ங்
...க...ள்...வ...ர...வே...ண்... டா...ம்...எ....ன்....னை....ம...ற...ந்
...து....வி....டு....ங்...க....ள்...என்று கூறினாள்.

சுகுமாரனுக்கு இம் மொழிகள் அம்பு பாய்வது போலவே இருந்தன. திலகவதியின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு "கஸ்தூரிபாய்! ஐயோ! இவ்விதம் சொல்லாதே! உன்னுடைய காலைப் பார்க்கையில் எனக்கு விவரம் தெரியாமல் மனந் தவிக்கின்றது. எனக்கு ஆபத்து வந்தாலும் சரி; நான் அடியோடு மாண்டாலும் சரி; இந்த ஜென்மாவில் உன்னை மறப்பேன் என்று நினைக்காதே! அது சற்றும் ஆகாத காரியம். பயப்படாதே. உனக்கும் எனக்கும் ஒரு விதமான விபத்தும் நேராதவாறு நான் நடந்து கொள்கிறேன். அதோ வந்து விட்டார்கள். நான் அவர்களிடம் கூறிக்கொண்டு போய் விடுகிறேன்" என்றான்.

வினா:—ஐயா! உமக்கு என்ன வேலை? எப்படி குடும்பம் நடக்கிறது?

விடை:—ஊருக்குச் செல்வோருக்கு உதவி செய்யும் வேலை என்னுடையது (பிணந்தூக்குவது) அதில்தான் ஜீவனம் நடக்கின்றது.

இதற்குள் தலையில் கட்டு கட்டிய குழந்தையைத் தூக்கிக் கொண்டு கணபதி அங்கு வந்து "அப்பப்பா! என்ன விஷமம் பண்ணுகிறதுகள் சார்! எனக்கு இந்த தொல்லே வெகு கஷ்டமாக விருக்கிறது. காயத்தைப் பாருங்கள். தினம் இப்படிப்பட்ட உபத்திரவந்தான்'' என்ருர்.

இது கேட்ட சுகுமாரன், "ஐயையோ! குழந்தைகள் செய்யும் ரூட்டியைக் கூறவேண்டுமா! நம்ம வீட்டில்கூட இந்தத் தொல்லை தான். சரி; நான் சென்று வருகிறேன்.'' என்று கூறிக் கிளம்பினன். அப்போது வீதியில் "சார்! சார்!'' என்ற குரல் கேட்டதும், கணபதி ஓடினன். அங்கு வந்தவர் ஓர் சாயப்பு. அவர் மிகவும் தணிந்த குரலில் "ஐயா! ஊர் முற்றும் வைசூரி அதிகரித்திருக்கிறது. ஆகையினால் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரையில் எல்லோரும் அம்மை குத்திக் கொள்ளவேண்டும். பெரிய அம்மை வார்க்காதவர்கள் கட்டாயம் குத்திக் கொள்ள வேண்டும்.'' என்ருர்.

இந்த வார்த்தை உள்ளிருக்கும் சுகுமாரன் காதில் கேட்டு விட்டது. "ஐயையோ! தனக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்றே நினைத்து விட்டான். உண்மையாகவே இவ்விதம் வருவார்கள் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை யாகையினல் அவன் துணிந்து வந்த இடத்தில் இவ்விதம் வந்து விட்டதை எண்ணி அப்படியே இடிந்து போய் விட்டான். தான் உள்ளே இருப்பதை அந்த மனிதன் வந்து பார்த்து விட்டால் தனது திருட்டு வெளியாகி விடுமே!'' என்ற அபாரமான திகில் வந்து சுற்றிக் கொண்டு தவிக்கிருன். எப்படி தான் தப்புவது என்று குழம்பிப் போய் நின்று விட்டான்.

வினு:—மாமாங்கத்திற்குப் போகாமலேயே மாமாங்கம் பார்த்தேன் என்கிருயே? அது எப்படி முடியும்?

விடை:—என் மாமா என்னவோ வீட்டிலேயே இருக்கிருர். அவருடைய அங்கங்களைத் தினம் பார்ப்பதும், அவருடைய பருத்த தொப்பையைத் தடவுவதுமாக விருந்தேன். அது மாமாங்கத்தில் சேர்ந்ததில்லையா?

8-வது அதிகாரம்

பிரிவாற்றாமை—பேரிடி முழக்கம்

அங்கச்சியம்மாள் அடிபட்ட குழந்தையை வைத்து ஆட்டிக் கொண்டே, "இன்று என்ன வேளையில் எழுந்தேனோ! குழந்தைகளுக்கெல்லாம் அடிபடுவதும் ரத்தம் வடிவதுமாகவே இருக்கிறது. அம்மை வராயலிருக்கையிலேயே இழவெடுத்த கார்போரேஷனின் உபத்திரவம் பெரிய இழவாயிருக்கிறது.'' என்று சுப்ரபாதம் பாடி விட்டு அக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீதியில் சென்றாள்.

கணபதி சாயப்புவின் வார்த்தையைக் கேட்டதும் "இதென்னடா சங்கடம்? அம்மை வந்து விட்டதாக அவன் வந்தான்; இன்னும் அவன் போகவில்லை. அம்மை குத்துவதற்காக இவன் வந்து விட்டான். என்ன செய்வது?'' என்று யோசித்துக் கொண்டிருக்கையில் சுகுமாரன் தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வெகு தைரியமாயும், வீரமாயும் தன் ஹாட்டை நன்றாக இழுத்து விட்டுக் கொண்டு வீதியில் வந்து, ஒரு ஸெகண்டும் நிற்காமல் "சார்! நீங்கள் அம்மை குத்திக்கொள்ள வேண்டியது அவசியம்தான். எல்லோரும் குத்திக் கொள்ளுங்கள். சாயப்பு! இவர்களுக்கு அம்மை குத்தி விடுவதுடன், இத் தெருவிலுள்ள எல்லோருக்கும் குத்தி விடும். நான் வருகிறேன்'' என்று கூறிக்கொண்டே அதிகாரமாக உத்திரவிட்டு விட்டுச் சடக்கென்று போய் விட்டான்.

வினா:—எப்போது பார்த்தாலும் சிலர் கடு கடு என்று முகத்தைக் காட்டுகிறார்களே அது எதற்கு?

விடை:—அப்படி இருந்தால் தன்னிடம் யாரும் நெருங்க மாட்டார்கள். பணம் முதலியன எதுவும் கடன் கேட்கமாட்டார்கள் என்பதற்காகத்தான்.

இது கேட்ட சாயப்புவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "இந்த மனிதன் யார்" என்று விழித்தான். இவன் விழிப்பதைக் கண்ட கணபதி "என்னய்யா! உங்கள் இலாகா மனிதரே உங்களுக்குத் தெரியவில்லையா! அவர் சூபர்வைஸராம். இங்கு அம்மை வார்த்திருப்பதாகப் பொய்த் தகவல் எப்படியோ அங்கு எட்டியதாம்; அதனால் பார்வையிட வந்தார். உண்மையில் இங்கு அம்மையும் இல்லை; ஒன்றுமில்லை." என்றார்.

சாயப்பு 'நம் இலாகாவில் நாம் அறியாத முகம் யாராக விருக்கும்? நாம் நன்றாகக் கவனிப்பதற்குள் ஆசாமி போய் விட்டானே! ஒரு வேளை புதிதாக யாரேனும் வந்திருக்கலாம்." என்று தனக்குள்ளேயே கேள்வி கேட்டுப் பதிலும் தீர்மானித்துக் கொண்டு, பிறகு எல்லோருக்கும் அம்மை குத்திவிட்டுப் போய்விட்டார்.

'செத்தேன் பிழைத்தேன்' என்று ஓடி வந்த சுகுமாரனுக்கு 'அந்த சாயபு தன்னைத் துரத்திக் கொண்டு எங்கே வந்து விடுகிறானோ!' என்ற பயம் பூர்ணமாக உதைக்கின்றது. அவனுடைய நடையின்வேகம் மெயில் ட்ரெயினுடன்போட்டியிடுகின்றது.அவன் சடக்கென்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு நடப்பதைப் பார்த்தால் தன்னை யாரேனும் சந்தேகிக்கப் போகிறார்களே என்ற அச்சம் ஒரு புறம் பாதிப்பதாகத் தெரிகின்றது. இத்தனை அவஸ்தையோடு அவன் மெல்ல தன் விடுதியை அடைந்தான்.

உடனே தனது வேஷத்தைக் களைந்து விட்டு, சாதாரண சுகுமாரனாக மாறிய பிறகே அவனுக்குச் சரியான படி மூச்சு வந்தது. அதன் பின்னர் தனது சொந்த வேலைகள் வந்து சூழ்ந்து கொண்டன. இவ்விதம் காலில் கொப்பளங் கண்டதற்குக் காரணம் அந்த அம்மாள்தான் என்று தெரிந்து விட்டது. அதுபற்றியே வெகு நேரம் சிந்தித்தான். தான் அவளைப் பார்க்கும் பாக்ய மேனும்

வினு:—அப்பா! கச்சேரிக்கு வந்தவுடன் பாடகர் "நின்னுக்கோ" என்கிறாரே! கச்சேரி நின்னிண்டா கேக்கணம்?

விடை:—இல்லை குழந்தாய்! "நின்னு கோரி" என்கிற மோகன ராக வர்ணத்தைப் பாடுகிறார். நாம் உட்கார்ந்தே கேட்கலாம்.

கிடைத்தது பற்றி அளவிலாத சந்தோஷங் கொண்டான். தன்னை வரவேண்டாமென்று கண்டிப்பாய்க் கூறி இருக்கையில் தான் மீண்டும் எவ்விதம் செல்வது. எவ்விதம் சென்றால் ஆபத்து நேராதிருக்கும்?—என்று யோசித்தான்.

பின்னும் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அவர்கள் வீட்டுப் பால்காரன் மூலமே விஷயமறிந்து வந்தான். திலகவதிக்கு நன்றாகக் குணமாகி விட்டதென்றாலும் கால் இன்னும் நடக்கக் கூடவில்லை என்று அறிந்தான். எவ்விதம் பார்ப்பது, என்ன உபாயம் செய்வது என்று யோசித்து, ஒரு தீர்மானம் முடிவு செய்து கொண்டான்.

மறு தினம் பகல் கணபதி ஆபீஸுக்குச் சென்ற பிறகு சுகுமாரன் ஓர் வேலைக்காரனைப்போல சகஸ்ர நாமக்கந்தலான ஓர் சொக்காய்—கோட்டு—மாட்டிக்கொண்டான். அழுக்குப் படிந்த ஒரு கந்தத்துணியை முழங்கால் மட்டும் உடுத்திக்கொண்டு தலையில் ஓர் கந்தத்துணியை பிரிமணை போலச் சுற்றிக்கொண்டு, ஒரு கதிர் ஒரு பக்கம் காணும்படிப் பட்டையாக நாமத்தைச் சாத்திக்கொண்டு, கையில் ஒரு நோட்டு புத்தகத்தை எடுத்துக்கொண்டு திலகவதி வீட்டிற்கு வந்தான். இந்த வேஷங்கள் எல்லாம் ஒன்று கூடி அவனை வயது முதிர்ந்தவன் போலக்காணச் செய்தன.

அங்கச்சியம்மாள் வீதியில் திண்ணைமேல் இன்னும் சில பெண்களோடு அரட்டையடித்துக் கொண்டு குசாலாக உட்கார்ந்திருந்தாள். சுகுமாரன் இந்த அலங்கோலத்துடன் "எளவெடுத்த இவியிகோல் பள்ளிக் கூடத்து வேலெயும் போதும்; எங்காலு ஒடிஞ்சு போவுதும் போதும். பாயும் வவுறு சேரவேலே இது." என்று

நேற்று எந்த புண்ணியாத்மா ரேடியோவில் பாடினார்களோ தெரியவில்லை.—என்று கந்தன் கூறி முடிப்பதற்குள் நந்தன் "ஆகா! அவ்வளவு ஆநந்தமாயிருந்ததா! என் மனைவிதான் பாடினள்" என்று வெகு சந்தோஷத்துடன் கூறினன். இதற்குள் கந்தன், "அவள் மகராஜி நன்றாக இருக்கவேணும். எனக்கு சங்கீதத்தினிடத்திலேயே வெறுப்பை யுண்டாக்கியவள் உன் மனைவியா?

முணுமுணுத்துக்கொண்டு "அம்மா! இந்த ஊட்டே படிக்கற பொண்ணுக்கிருங்களா; அந்தம்மாளே வாத்யாரம்மா இட்டாரச் சொன்னாங்க. இல்லீன்னாக்க கடுதாசி எயுதி வாங்கியாரச் சொன்னாங்க. இல்லாப்பூட்டா பேரை அடிச்சிபுடுவாங்களாம். கூப்பிடுங்கோ." என்றான்.

திலகவதிக்காக தான் ஒரு வேலை செய்துவிட்டாலும், வார்த்தை சொல்லிவிட்டாலும் மகா ஈனையம் என்று நினைக்கும் அங்கச்சியம்மாள் அலக்ஷியமான பார்வையோடு "ஓகோ! அந்த மூதேவி கெட்ட கேட்டிற்கு நான் உள்ளே போய் அவளைக் கூப்பிட வேலைக்காரியா! வேண்டுமானால் நீயே போய் கேட்டுக்கொண்டு போ! நான் ஊழியக்காரியல்ல." என்றாள்.

"இதைக் கூறடி மகராஜி" என்று எண்ணி அவன் உள்ளே சென்றான். விசுப்பலகையில் படுத்திருந்த திலகவதி *சாருலோசனா என்ற நாவலைப் படித்துக்கொண்டிருந்தாள். அதில் ஜெயமணியின் துயரத்தைப் படித்து மனமுருகிக் கண்ணீர் வடித்துக்கொண்டே "ஐயோ! பெற்ற தாய்தந்தையரிருக்கையிலேயே ஜெயமணியின் காதலும், வாழ்வும் பாழாகிவிட்டதே! நம் கதியைக் கூறவும் யோக்யதை உண்டா! ஐயோ! ஈசா! எனக்கேன் இந்த எண்ணம்!" என்ற இருக்கையில் சுகுமாரன் "அம்மா!" என்று கூறிய குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

திரும்பிப் பார்த்ததும் இவளுடைய விசனமான நிலைமையிலும் சுகுமாரனுடைய முகத்தை எல்லாம் மறைக்கும் பட்டை நாமமும், கந்த கோட்டும், அழுக்குத் துணியும் ஒன்றுகூடி திலகவதிக்கு அடங்காத நகைப்பை உண்டாக்கிவிட்டன. குரலிலிருந்தும் அவனைப் பார்த்திருக்கும் அடையாளத்தைக் கொண்டும் இவன் சுகுமாரன் என்று கண்டுகொண்டாளே யன்றி திடீரென்று பார்ப்போருக்

---

* சாருலோசனா

எத்தகைய கன் மனத்தையும் கரைத்துருக்கிக் கண்ணீர் வடிக்கச் செய்யும், அருமையான நாவல். விலை ரூ. 2—8…0. "ஜகன்மோகினி" சந்தாநேயர்களுக்கு விலை ரூ. 2/-

குச் சற்றும் தெரிய வராது. வாயைக் கெட்டியாக மூடிக்கொண்டு நகைத்தபடியே சுகுமாரனை உற்றுப் பார்த்தாள்.

சுகுமாரன் தான் ஏற்கெனவே தயார் செய்துகொண்டு வந்திருந்த கடிதத்தைத் திலகவதியிடம் கொடுத்து விட்டான். வீதியிலுள்ளவர்களுக்குக் காது கேட்கும்படி "அம்மா! உங்களை வாத்தியாரம்மா! இட்டாரச் சொன்னுங்க. இல்லாப்போனு எயுதி வாங்கியாரச் சொன்னுங்க." என்று கூறிவிட்டு மெல்லிய குரலால், "கஸ்தூரிபாய்! வித்யாசமாக எண்ணுதே! நான் நடைப் பக்கமாக நிற்கிறேன். நீ இந்த கடிதத்தைப் படித்துவிட்டு இந்த நோட்டுப் புத்தகத்தில் உன்னபிப்பிராயத்தைச் சுருக்கமாக எழுதிக் கொடுத்துவிடு." என்று சொல்லிவிட்டு, வீதிப் பக்கத்திலிருப்பவருக்குத் தெரியும்படியான இடத்தில் நின்றுன்.

திலகவதிக்கு சுகுமாரனுடைய தைரியத்தையும், கரை காணுத அன்பையும், கடலினும் ஆழமான காதலையுங் கண்டு வியப்பு மேலிட்டது. "அங்கச்சியம்மாள் வந்துவிடப் போகிறுளே!" என்கிற பயம் நடுங்குகின்றது. அதோடு அந்த கடிதத்தைப் பிரித்துப் படிக்க வாரம்பித்தாள்.

"என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட கோமளாங்கி கஸ்தூரிபாயிக்கு! இந்த ஆபத்தில் நீ பிழைத்ததற்காக நான் கடவுளை வணங்குகிறேன். என்னுடைய அகக் கோட்டையை முற்றுகை போட்டுப் பற்றிக் கொண்டு ஏக சக்ராதிபத்யம் செய்யும் அரசியாகிய உனக்கு என்னுடைய கருத்து எளிதில் விளங்கிவிட்டது என்பதை உன்னுடைய வாயிலாகவே அறிந்து அளவிலா ஆநந்தமடைகிறேன். உன்னுடன் பேசவும், பார்க்கவும் இந்த சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சமயம் கிட்டாது. கூடிய சீக்கி

வெளியூரிலிருந்து வந்தவரைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று நினைத்தும் வேலைத் தொந்தரவால் போக முடிகிறதில்லை. ஆனுல் அவசர வேலையாக வேறோரிடத்திற்குச் சென்றிருக்கையில் அவர்கள் அங்கு வரவும் விசாரிக்கவும் நேருகின்றது. அதனுல் அவர்கள் நம்மைப் பற்றி வித்தியாசமாக நினைக்க இடமுண்டாகின்றது.

ரத்தில் நான் ஊருக்குப் போக நேரலாம். அதற்குள் உன்னைக் கண்டு பேச என்னுள்ளம் மிகுந்த அவாக் கொண்டு துடிப்பதால் என்னை நீ உன் சாமர்த்தியத்திஞல் கட்டாயம் சந்திக்க வேண்டுமாய்க் கோருகிறேன். என் விலாசம் கீழே கொடுத் திருக்கிறேன். நேரில் சில விஷயங்கள் பேச வேண்டியிருப்பது முக்கியம். இந்த கடிதத்திற்குப் பதில் இந்த நோட்டு புக்கில் எழுதிவிடவும்.

உன்னை மறவாத
சுகுமாரன்."

அதைப் படித்தாள்; அதற்கு இன்ன பதில் எழுதுவதென்று தெரியவில்லை. எனினும் 'ஏதேனும் எழுதியனுப்பி விடவேண்டும்' என்று பயந்தவாறு நோட்டுபுக்கில் பின் வருமாறு எழுதினுள்.

"உத்தம குண வீர தீர சுகுமாரா! அன்பா!

கடிதங் கண்டேன். நான் மகா அபாக்யவதி; என்மீது தங்கள் காதலைச் செலுத்தி வீணே வருந்துவதைத் தாங்கள் விரைவில் மாற்றிக்கொள்ள வேண்டும். இவ்விதம் நான் வரைவதைக் கண்டு வருந்தலாம். முதலிலேயே தக்க சிகிச்சை செய்து ஒரு வியாதியை குணப்படுத்தி விடுவது வெகு நன்றல்லவா? ஆதலால் கூறுகிறேன். நான் தங்களைச் சந்திக்கும் விஷயத்தைப் பற்றி நிச்சயமாய்க் கூற முடியாது. ஏனெனில் நான் ஓர் கைதி. சிறைச்சாலையில் அடைபட்டுள்ளவள். ஆதலால் என்றைக்குப் பிராப்தமோ அன்று சந்திக்கலாம். ஆனல் இப்போதுள்ள காதல் என்ற செடியைக் கிள்ளி எறிந்து விடுங்கள். இதுவே முக்கியம். குற்றத்தை மன்னிக்கவும்.

தங்களன்புள்ள......"

அதை எழுதி முடிக்கையில் அவள் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்து விட்டது. அதை யடக்கிக்கொண்டு நோட்டு புக்கைச் சுகுமாரனிடம் கொடுத்துவிட்டாள். நோட்டு புத்தகத்தை

ஒருவரைப்பற்றி அனுவசியமாக அவதூருகப் பேசுபவர்கள் தங்களுக்குப் பணம் வேண்டியபோது கேட்பதற்கு மாத்திரம் பல்லைப் பிளந்து கொண்டு வருகிருர்கள்.

வாங்கிக்கொண்ட சுகுமாரனுக்கு அதில் என்ன எழுதி இருக்கிறதோ என்ற ஆவல் அடித்துக்கொள்கிறது. அங்கே படிக்க மனம் நடுங்குகிறது திலகவதியிடம் சொல்லிக்கொண்டு அவ்விடம் விட்டு வீதியில் வந்துவிட்டான்.

அந்த நோட்டில் எழுதி இருந்தவற்றைப் படித்தான். அபாரமான விசனமுண்டாகி விட்டது. “எக்காரணம் பற்றி இவள் இவ்வாறு கூறவேண்டும்? ஐயோ! நான் நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்றாய் விடுகிறதே!” என்ற விசனத்துடன் அவன் தனது விடுதியை யடைந்து அதே ஏக்கம் பிடித்துக்கொண்டு சிந்திக்கலானான். “நான் இனி அவளை எவ்விதம் மறப்பது? இது ஆகக்கூடிய காரியமா? ஐயோ! என்னுயிரே போய்விடினும் சரி. நான் என் காதல் கிளியை மறக்கமாட்டேன்” என்று பலவிதமாக யோசனை செய்து தவித்தான்.

தினம் அந்த வீட்டு வழியோடு சென்று வீதியிலாவது திலகவதி நிற்பாளா என்று பார்ப்பான். ஒன்றும் பயனளிக்கவில்லை. என்ன செய்வதென்று ஏங்கியே தன் வேலையைப் பார்த்து வந்தான். நாட்கள் சென்றுகொண்டே இருந்தன. அவளுடைய மனத்திற்கு விரோதமாகத் தான் சென்று பார்ப்பது சரியல்லவென்று அதையும் நிறுத்திக் கொண்டான். அவ்வாறு செய்ததில் அவன் மனவேதனை தினே தினே அதிகரித்துக்கொண்டே வந்தது.

திலகவதியோ தனக்குக் கொடுத்த கடிதத்தை அன்றே—அந்த நிமிடத்திலேயே—சுக்கல் சுக்கலாகக் கிழித்துவிட்டாள். அளப்பரிய வேதனைக்குள்ளானாள். “நான் அவ்விதம் எழுதி வைத்துவிட்டதைப்பற்றி என்ன நினைப்பாரோ! கோபிப்பாரோ! என்ன செய்வாரோ!” என்று சிந்தித்தாள். சிந்தித்துப் பயன் யாது?

ஆற்றில் வெள்ளம் வருவதும், ஒரு காரியத்திற்குத் தடங்கல் ஏற்படுவதும் முன்னெச்சரிக்கையிலாது நடைபெறும் சம்பவங்கள். தடங்கல் வருமோ என்று பயப்படும் காரியம் நிர்விக்கினமாக நிறைவேறுகின்றது; ஒன்றும் வராதென்று நிச்சிந்தையாக இருக்கும் காரியங்களில் பலவித இடுக்கண்கள் நேர்ந்துவிடுகின்றன.

காலை நன்றாகப் பூமியில் பாவ முடியவில்லை யாதலால் சமையல் முதலிய வேலைகளைச் செய்வதற்கு முடியவில்லை. அங்கச்சியம்மாள் சில தினங்களுக்கு மட்டும் சமையலுக்கு ஆள் வைத்துக் கொண்டாள். தான் ஏதும் வேலை செய்யாது உட்கார்ந்திருப்பதால் திலகவதிக்குத் தேகம் குன்றிப்போகின்றது. வேளைக்கு வேளை சாப்பாட்டிற்கு வரும்போதெல்லாம் திலகவதிக்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடக்காமலிருப்பதில்லை. "ஏண்டி! வெத்திலை பாக்கு வைத்து வேளைக்கு வேளை பிண்டத்திற்கு அழைக்கவேண்டுமோ! வந்து கொட்டிக்கொண்டு போவதற்கென்ன?" என்று அங்கச்சியம்மாள் அன்புடன் ஆசிர்வதிப்பாள்.

இவ்விதம் கூறுவதால் திலகவதி சற்று முன்னதாகப் போய் விட்டாலோ அங்கச்சியம்மாள் "ஏண்டி! பசி உசிர் போகிறதோ! காதடைத்துவிட்டதோ! முதல் பந்தி மரியாதை உன்னுடைய மிராசோ! போடி வெட்கங்கெட்ட கழுதை!" என்பது. குழந்தைகள் சாப்பிடுகையில் வந்தால் என் குழந்தைகள் சாப்பிடுவதற்குக் கண்ணைப் (திருஷ்டி) போடவேண்டாம். பிறகு வரலாம். என்பது. கணபதி சாப்பிடுகையில் தவறி வந்துவிட்டால் "ஓகோ! எஜமானருக்குச் சரியாக உட்கார்ந்து சாப்பிட வந்துவிட்டாயோ! சீச்சீ! ஓடு." என்பது. பிறர்க்கே இப்படி இருக்கத் தானே சாப்பிடுகையில் வந்துவிட்டால் கேட்கவேண்டுமா?

அடாடா! இந்த தர்ம சங்கடத்தில் அந்த அபலை யகப்பட்டுக்கொண்டு விழிப்பதன் கஷ்டம் கூறவியலாது. இந்த உபத்திரவத்திற்காக "எனக்குப் பசி இல்லை; சாப்பாடு வேண்டாம்" என்று இராக்காலத்தில் சில தினம் பட்டினியாகவே கிடப்பாள். இதற்கும் நமது அங்கச்சி சும்மா விருக்கமாட்டாள். "ஓகோ! பசிக்காத வரம் வாங்கி வந்துவிட்டாயோ! தெரியுமடி! உன்னுடைய மாய ஜாலம்! ஒருவருமறியாது பாலையும், மோரையும், டிப்பனையும் திரு

நன்றாகப் படித்த பெரிய மனிதர்களே வாயொழுங்காகப் பேசி, ஆள்மீது ஆளைத் தூக்கிப்போட்டுத் தாம் தப்பித்துக்கொள்கிறார்கள். சோதாக்களின் செய்கைகளைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

டித் தின்றுவிட்டாயாக்கும். அந்த திமிர் இப்படி கூறச்செய்கிறது. அதான் உள்ளே பால், மோர் எல்லாம் குறைகின்றன. மூன்று வேளை கும்பேசுவரன் போலக் கொட்டிக்கொள்பவளுக்கு பசிக்காது என்ன வந்துவிட்டதாம்?'' என்று கடிந்து திட்டுவாள்.

இந்த வார்த்தைக்கு ஏற்றாற்போல திருட்டு மதியுடைய சமையல்காரி அந்த அல்ப அங்கச்சியம்மாளை ஏமாற்றிப் பாலையும் மோரையும் குடித்துவிட்டுத் தண்ணீரை ஊற்றி விடுவாள். இந்த அக்ரமக்கார நாய் செய்யும் வேலை மகா உத்தம சிகாமணியாகிய திலகவதியின் தலையில் வந்து விடியும். இவ்விதமான வார்த்தை கேட்கும் அந்த அணங்கின் மனம் எவ்விதந்தான் தவிக்கும். தனக்கு தேக சுகம் சரியாக இல்லாவிடினும் தான் வேலை செய்து கஞ்சி குடித்தால்தான் தன் தேகத்தில் ஒட்டும் என்று தோன்றி விட்டது. அதற்குமேல் சற்று தத்தித் தடுமாறி நடக்கவாரம்பித்ததும், "மாமீ! இனிமேல் எனக்கு உடம்பு சரியாகிவிட்டது. நானே சமையல் செய்கிறேன். நீங்கள் ஆளையனுப்பி விடலாம்'' என்று கூறினாள்.

இதுகேட்ட அங்கச்சியம்மாள் மிகுந்த சந்தோஷத்துடன் அந்த நிமிடமே ஆளையனுப்பி விட்டாள். திலகவதி பழய உத்யோகத்தை மீண்டும் ஏற்றுக்கொண்டு தன் கடமையைச் செய்யத் துவக்கினாள். சுகுமாரனின் நினைவை மட்டும் மறக்கக் கூடவில்லை. சதா எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தாள். சில தினங்களாயின. கணபதியை பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றிவிட்ட செய்தி கிடைத்துவிட்டது. இச்செய்தி திலகவதியின் மனத்திற்குச் சற்று விசனம், ஆறுதல் இரண்டையும் அளித்தது.

தான் ஊரை விட்டுச் சென்றுவிட்டால் சுகுமாரன் தன்னை மறந்துவிடக் கூடும். அதனால் அவனுக்கு நன்மைகள் உண்டாக

நம்முடைய சொந்த பணத்தில் நாம் தின்பண்டங்கள் வாங்கித் தின்றாலும் கூட அதற்குத் தக்க உழைப்பு ஒரு நாளைக்குக் குறைந்து விட்டால், நாம் தின்றது தண்டமென்று தோன்றுகின்றது. அந்த உணர்ச்சி இல்லாவிடில் வேலையும் நடப்பதில்லை.

லாம் என்றதுபற்றி ஆறுதலும், சுகுமாரனை இனித் தான் கட்டோடு மறந்துவிட—பார்க்காதிருக்க—நேர்ந்துவிட்டதே என்பது பற்றி விசனமும் உண்டாகிவிட்டன. அந்த நிலைமையில் அவள் கடைசீத் தரமாகத் தன் காதல் தெய்வத்தை தரிசிக்க மட்டும் வெகுவாய் விரும்பினாள். அது தனக்கு எவ்விதம் ஆகக்கூடிய காரியம் என்று சிந்திக்கலானாள்.

திலகவதிக்கு சீக்கு வந்த பிறகு அவள் பாடசாலைக்குச் செல்வதை அடியோடு நிறுத்திவிட்டாள். ஆதலால் அந்த சாக்கும் சொல்ல முடியவில்லை. எவ்விதம் வழி செய்யலாம் என்று யோசித்தாள். அன்று வெள்ளிக்கிழமை யாகையினால் அங்கச்சியம்மாளுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வித்து, அவளுக்குக் கால் பிடித்து, தலையை ஆத்திஉலர வைத்து, தூப தீபங்கள் போட்டு, சாப்பாடு பரிமாறி, வெத்திலை மடித்துக் கொடுத்து, சகலமான ஊழியங்களும் செய்த பின் இருந்து முகங் கழுவி ஈருடன் பேன் வாங்கி என்று ஔவையார் பாடியதுபோலச் சமயம் பார்த்து, அங்கச்சியம்மாளின் அங்கம் குளிர்ந்திருக்கையில் நடுங்கியவாறு "மாமீ! எனக்கோர் உத்திரவு தரவேண்டும். நாம் இவ்வூரை விட்டுப் போகப் போகிறோம். இனிமேல் இப்பக்கம் வரப்போவதில்லை. ஆதலால் எனது பாடசாலை உபாத்தியாயரையும், சினேகிதைகளையும் கடைசீ தரமாகப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். அதற்கு மட்டும் எனக்கு அனுமதி யளிக்கவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

ஒருநாளும் இல்லாமல் திருநாளைப் போல அங்கச்சியம்மாளின் மனமும் அன்று அவளை யறியாது மாறிவிட்டது. அதன் காரணத்தை அவளே அறியமாட்டாள். திலகவதிக்கு ஏதும் குறுக்கு சொல்லாமல் "முன்னைப்போல வெய்யிலில் போய் அகப்பட்டுக் கொள்ளாதே; ஆதலால் இரண்டாம் வேளைக்குப் பலகாரம், காப்பி

திருப்தியில்லாத மனிதர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாலும் ஒன்றே: மூட்டை மூட்டையாகக் கொடுத்தாலும் ஒன்றே. அப்படிப் பட்டவர்களுக்குக் கொடுத்து, வார்த்தை கேட்பதைவிட ஒன்றுமே கொடுக்காதிருப்பது மேலானது.

முதலியவற்றை இப்போதே செய்து வைத்துவிடு. வெய்யில் நன்றாக வருவதற்கு முன்பே சென்று, சரியாக 5 மணிக்கு வெய்யில் தாழ்ந்த தும் வந்து சமையல் செய்யலாம். அவ்வாறு செய்துவிட்டுப் போய் வா!'' என்று கூறிவிட்டாள். இந்த பதில் வரும் என்று திலகவதி எதிர் பார்க்கவே இல்லை. ஆதலால் சந்தோஷம் பொங்கிவிட்டது. உடனே தன் வேலைகளை வெகு பரபரப்புடன் செய்து முடித்தாள். தலையை வாரிப் பின்னி, பொட்டு வைத்துக்கொண்டு கிளம்பினாள். "மாமீ! நான் வருகிறேன்'' என்று மீண்டும் வெகு வணக்கமாகச் சொல்லிக் கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டாள். தான் முதலில் ஒட்டலுக்குச் செல்வதா, பாடசாலைக்குச் செல்வதா!'' என்ற எண்ண முண்டாகியது.

"முதலில் ஒட்டலுக்கே செல்வது; பிறகு பாடசாலைக்கு அங்கிருந்து போவது'' என்று தீர்மானித்துக் கொண்டு நடக்கவாரம்பித்தாள். ஒட்டல் வீதியை அடைந்தாள். அங்கு பல ஜனங்கள் போவதும் வருவதுமாக விருந்தார்கள். எங்கும் வெளிக் கிளம்பி யறியாத பேதை யாகையினால் லஜ்ஜை மிகவும் பாதித்தது. அதோடு மெத்தை ஏறி தன் கடிதத்தில் கண்டுள்ளபடி நம்பர் 6. B. என்ற அடையாளம் உள்ள அறையைத் தேடிக் கொண்டு சென்றாள். அந்த இலக்கமுள்ள கதவு தென்பட்டது; அதை உற்றுக் கவனித்தாள்; கதவு பூட்டப்பட்டிருந்தது.

அவ்வளவுதான் அப்படியே இடிந்துபோய் விட்டாள். "ஐயோ! பெரிய பிரம்ம ராக்ஷஸிக்கு ஒப்பானவளிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு நாம் துணிகரமாக வந்தும், என்னுடைய துரதிருஷ்ட நிழல் துடர்ந்து வந்து விட்டதே! இதுவும் ஒரு சோதனையா! நாம் இங்கு நிற்பதால் வருவோரும் போவோரும் விறைக்க விறைக்கப் பார்த்துக் கொண்டே போகிறார்களே! அவர்

நமக்கு மிகவும் நெருக்கடியான சமயத்தில்தான் மனத்திற்குக் கலக்கம்; பற்பல யோசனைகள். இதிலிருந்து நாம் எவ்விதம் ஜெயிப்பது என்கிற ஏக்கம், எல்லாம் ஒன்றுகூடியிருக்கும் சமயத்தில் அவற்றிலிருந்து ஒரு புதிய கற்பனை (plot) உண்டாகிறது. அதன் மூலமாகக் கடவுள் சிறிது ஆநந்தத்தை யளிக்கின்றார்.

புதிய நாவல் வெளிவந்து விட்டது

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே !

ஸர்வ வியாபியாகிய சர்வேச்வரனின் கருணை கடாக்ஷத்தினாலும், அபாரமான அன்புடன் கூடிய மழையைப்போல உங்களது அளப்பரிய அன்புடன் கூடிய ஆதரவினாலும் சோதனையின் கொடுமை அல்லது செல்வமே சொர்க்கம் என்கிற புத்தகத்தை எழுதிக் குறித்த தேதியில் முடித்து, அது வெளிவந்து விட்டது.

1. தாய் வெறுத்தால் நாயும் வெறுக்கும். 2. பெண்டாட்டி பித்தன்—சண்டாள யோசனை. 3. தனத்தின் மூலம் கனத்த த்வேஷம். 4. நிலையற்ற பணமே! கொலைக்கஞ்சாயோ! 5. தேடாத்துணைவன்—திகட்டாக் கல்வி. 6. ஜமீந்தாரிணியின் செருக்கு. 7. காதல் உதயம்—களங்கமற்ற அன்பு. 8. அநாதை ஆச்ரமம்—விநோத விளம்பரம். 9. தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கியது. 10. இடி பேலிடித்த பேரிடி. 11. தழல் மீது விழுந்த புழுக்கள். 12. சாகா அலைகள்—மோகினி அவதாரம். 13. அன்பு பூங்காவில் இன்புறும் கிளிகள்.

இத்தனை அதிகாரத் தலையங்கங்களுடன் 370 பக்கங்கள் கொண்டது. அழகிய ஆப்டோன் படத்துடன் கூடிய அட்டையுள்ளது.

தாயாருடைய பால் இல்லாவிட்டால் ஒரு குழந்தைக்கு எப்படி புஷ்டியும், ஆதரவுமில்லையோ அதுபோல மோகினிச் செல்வியிடத்தில் அபாரமான ப்ரீதியைச் செலுத்திய உங்கள் அன்பால்—அன்பாகிய பால்—தான் இப்புத்தகக் குழவி வளரவேண்டும். அது இல்லையேல் தாய்ப் பாலற்ற குழவி போன்று ஆகும். நாம் முன்பு விளம்பரம் செய்கையில் புத்தகம் எத்தனை பாரங்களில் (Forms) முடியும் என்ற நிதானம் தெரியாமையினால் குறைந்த விலை போட்டோம். பக்கங்கள் அதிகமாகிவிட்டதால் இதன் விலை 1—8—0 ஆக இப்போது மாற்றப்பட்டுள்ளது. சந்தா நேயர்களுக்கு விலை 1—4—0 தான். கதம்பமாலையையும் இதையும் ஒரே சமயத்தில் சேர்ந்து வாங்கினால் (முன் பணம் இரண்டு ரூபாய் மணியார்டர் அனுப்பினால்) தபால் செலவின்றி இரண்டு புத்தகங்களும் அனுப்பப்படும். வி.பி.யில் அனுப்பப்பட மாட்டாது.

இதுவரையில் வெளியான புஸ்தகங்களைப்போலவே இதையும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறேன்.

தங்கள் சகோதரி,

வை. மு. கோதைநாயகி.

Dear sirs,

In my mania for novel reading, it has become my habit to remit the cost of every new book that is advertised to be out shortly, but in numerous cases I have had to wait for months, and even years. In your own case, I had to ask you to adjust the amount I sent for "JAYA BARATHI" towards the current year's subscription as the book was not published even after several months of its advertisement. Though I had my own doubts that the advertisement about your present novel "SOTHANAYIN KODUMAI" also would share the same fate, I sent its cost, resolving that this should be the last occasion when I send for a book before its actual publication. I was really very much surprised to get the parcel this morning, Kindly accept my congratulations for not being unpunctual.

I immediately went through the book and could not stir out till I finished it. It will be voluminous if I were to write out my feelings, but still I could not close this letter without mentioning that on 5 or 6 occasions I could not control the flowing down of tears—especially the troubles of Santha, Achutha's death scene, the parting of the lovers, the mishaps during their separation, the arrest & sentence on murder charge..........Murugan's sense of duty, the new way of detecting the criminals are very admirable. Mohanavatar and other humourous portions create a good deal of laughter. The steady growth of love in spite of the wide gulf that stands between them and its fruition is really moving.

I wish all success to the authoress.

Yours faithfully,

(Sd) S. Mohamed.

எங்கே போயிருப்பார் என்று நாம் அறிவது?" என்று மனம் உடைந்து போய் நின்று விட்டாள்.

அந்த அறைக்கு எதிர்ப்பக்கத்து அறையில் ஓர் பெண்மணி தையல் மெஷினில் தைத்துக் கொண்டிருந்தாள். 'அவ்விடமாவது சென்று பேசுவோம்' என்று எண்ணி அங்கு சென்றாள். அந்த மாது வெகு வணக்கத்தோடு வரவேற்று உட்காரச் செய்து "உனக்கு என்ன தைக்கவேண்டும்?" என்று தன் வேலையின் தோரணையில் கேட்டாள்.

திலக:—(இதுவும் ஒரு அனுகூலந்தான் என்று எண்ணி) "அம்மா! வீட்டில் என் தங்கைக்கு விவாகம் வரப் போகிறது. அதற்கு நிறைய ஜாக்கெட்டுக்கள், கவுன்கள், எம்ப்ராய்டரி வேலைகள் முதலியன செய்துத் தர வேண்டும். அதற்கெல்லாம் கூலி என்னவாகும் என்று விசாரிக்கவே வந்தேன்.—என்றாள்.

இது விஷயமாக அவளுடன் பேசிக் கொண்டிருக்கையில் சுகுமாரனின் அறை திறக்கப்பட்ட ஓசையைக் கேட்டு எட்டிப் பார்த்தாள். பிறகு தான் நாளைக்கு வேலை கொண்டு வருவதாகக் கூறி விட்டு அங்கிருந்து நேரே சுகுமாரன் அறைக் கதவண்டை எட்டிப் பார்த்தாள். சுகுமாரன் ஓர் சாய்வான நாற்காலியில் படுத்திருப் பதைக் கண்டு ஓசை செய்யாமல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று கதவைச் சாத்திவிட்டு மெல்ல நடந்து அந்த நாற் காலியின் பின் புறம் சென்று சற்று நேரம் பதுமைபோல நின்றாள்.

சுகுமாரன் ஏதோ ஆழ்ந்த யோசனை செய்தவாறு தன் கையைத் தலைமீது வைத்துக்கொண்டு தனக்கெதிரிலுள்ள ஜன்ன லைக் கவனித்துக் கொண்டிருந்தான். திலகவதி அப்போதும் ஓசை

மனது கலக்கமற்று அமைதியாக விருக்கும் சமயத்தில் சரியான கற் பனை யுண்டாவதில்லை. கற்பனை ஊற்றுபோலச் சுரந்து வரும் சமயத் தில் அதை வரையவிடாது ஒருவர் பின்னொருவராக வந்து அதைக் கலைத் துக் கலக்கிவிட்டுப் போகின்றார்கள். எல்லாம் பொருந்தி உட்கார்ந்து வேலையாகக் கூடிய சமயம் ஒரு நாளைக்கு அரை மணிகூடக் கிடைப்பது அரிதாயிருக்கின்றது.

செய்யாமல் பின் பக்கத்திலிருந்து முன் பக்கம் வந்து அவனது இரு பாதங்களையும் பிடித்தபடி மண்டியிட்டுக்கொண்டு வணங்கி, "நான் தங்களுடைய ஆழ்ந்த யோசனை வேளையில் தடை செய்வதைப் பற்றி மன்னிக்க வேண்டும்." என்று கூறினாள்.

சுகுமாரனுக்கு இந்தக் காட்சி திடீரென்று உண்டாகியதால் அவன் திடும் என்று அலறினான். 5 நிமிஷ நேரம் கல்லாய்ச் சமைந்து விட்டான். பிறகு திலகவதியை நோக்கி "ஹா! கஸ்தூரி பாய்! உனக்கு இந்த ஏழை மீது தயவு வந்ததா! இன்று உனக்குக் கருணை பிறந்ததா! இதென்ன கனவிலும் நினையாதவாறு திடீரென்று உன்னைக் கண்டது எனக்கு வியப்பிலும் வியப்பாக விருக்கிறதே! ஏன் இப்படி உன் தேகம் நடுங்குகின்றது? எழுந்திரு." என்று அவளைத் தூக்கி அருகிலிருந்த ஆசனத்தில் அமரச் செய்தான்.

திலக:—தாங்கள் கூறுவதுபோல எனக்குக் கருணை பிறப்பதென்றது வீணான வார்த்தையாகும். கடவுளுக்குக் கருணை பிறக்குமாயின் அதுவன்றோ நமக்குப் பலனளிக்கும். என்னுடைய நிலைமையை முற்றும் தெரிந்த தாங்கள் இவ்விதம் கூறலாகுமா!

சுகு:—மாதரசியே! நீ எத்தனைதான் கூறிய போதும் என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட பெரிய கொள்ளைக்காரி நீதான். 'அந்த சர்கஸ் கம்பெனியில் நான் ஏன் சாரணத் தொண்டு புரிய வந்தேன்?' என்று என்னை நான் தினம் வெறுக்கின்றேன். சாரணர் படையில் வந்து பெரிய கொள்ளைக்காரியின் கையில் சிக்கிக் கொண்டு நான் படும் பாடு என்னைப் படைத்த சர்வேச்வரனை யன்றி வேறு ஒருவரும் அறிய முடியாது. எக் காரணத்தினால் உன்னை வெறுக்கும்படியாக நீ கூறுகிறாய்! அதையேனும் விளக்கி கூறமாட்டாயா ?

திலக:—ஐயோ! இக்கேள்விக்கு நான் என்ன விதமான பதில் கூறுவேன்? இந்தக் காரியம் நிறைவேறாது என்கிற நிச்சயம் என்

கையில் பணமிருந்தால் செலவாகி விடுமே என்று அதை ஒருவரிடம் கொடுத்துக் காப்பாற்றச் சொல்ல, அந்த மனிதனே தனக்கு எதிர்பாராத விதமாய்ப் பணங் கிடைத்த பெருமையை எண்ணி அதைக் காப்பாற்றுவதாகக் கூறிச் செலவழித்துவிடப் பிறகு சொந்தக்காரர் பணத்தைக் கேட்

மனத்தில் பட்டிருப்பதால் நான் கூறுகின்றேன். நான் மகா பாவி; துர்பாக்கியவதி. தாங்கள் அந்த கம்பெனிக்கு ஏன் வரவேண்டுமென்று விசனிப்பது போல, நானும் ஏன் வந்தேன் என்று பலகாலும் சிந்தித்து வருந்துவதுண்டு. வெகு ஆழமாயும், ஒருவராலும் கைப்பற்ற முடியாததுமா யிருந்த எனது அகக் கோட்டையை அரை நிமிடத்தில், சத்ருக்களே ஜெயித்து முற்றுகைப் போட்டு விட்டு என்னைக் கேவல நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். இது குற்றமல்லவா! கேவலம் பெண்பால் என்கிற இரக்கமே அற்று விட்டதா.

சுகு:—கண்மணீ! இம் மாதிரி யழைப்பதைத் தடுக்க என்னால் கூடவில்லை. உண்மையில் இருவரும் குற்றவாளிகள் என்றே வைத்துக் கொள்வோம். இருவருக்கும் கடவுள் சரியான தண்டனை விதித்து (மணமென்ற) விலங்கைப் பூட்டி விட்டால் சரியாகி விடுகின்றது. அதற்குச் சம்மதிப்பா யல்லவா!

திலக:—உம்; இவை எல்லாம் ஊமையன் காணும் கனவு தான். அப்படிப்பட்ட காலம் வருமாயின் நான் மறு ஜென்மமெடுத்தவளே யாவேன். அந்த எண்ணத்தை—சந்தோஷத்தை—எதிர்பார்க்க வேண்டாம். தாங்கள் கட்டாயம் என்னை மறந்து விட்டால் க்ஷேமம் உண்டு. இல்லையேல் என்னால் துன்பம் நேரிடுமே யன்றி இன்ப மென்பதில்லை. சரி; இது கிடக்கட்டும். நான் இப்போது வந்த காரணம் கூறுது வீண் மனக்கோட்டை கட்டுவதில் உபயோகமென்ன? எங்க மாமாவை இவ் வூரைவிட்டு மாற்றி விட்டார்களாம். எந்த ஊர் என்பது தெரியவில்லை. ஆதலால் நாங்கள் இன்று, நாளையிலேயே பிரயாணத்திற்குச் சித்தமாக வேண்டும். அதைத் தங்களிடம் சொல்லிக்கொண்டு தங்களைக் கடைசீ தரமாகப் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று வந்தேன். இந்த செய்தி தமக்கு வெகு விசனமாக விருக்கும் என்பது தெரியும்; எனினும், தங்களைப் பார்க்காமல் போவதற்கு மனம் சம்மதிக்கவில்லை; வந்தேன். அன்பரே! தங்க

கையில் காலும், அரையுமாகக் கொடுத்து பணத்தை உருப்படி இன்றிப் போய் விடும்படிச் செய்கிறுன். சில புண்ணியாத்மாக்களோ, கல்யாணக் கடிதம் (இன்ஸால்வென்ஸி நோட்டீஸ்) அனுப்பி விடுகிறுர்கள்.

ளுடைய எண்ணத்திற்கு இனிமேல் கொஞ்சம் மாறுதல் உண்டா கலாமல்லவா! மகா பாவி என்னைப் பார்த்துக்கொண்டே இருப்ப தால் தமக்குப் பெருத்த கஷ்டம். அந்த கஷ்டத்திலிருந்து தங்களை விடுதலை யடையச் செய்யும் பொருட்டே நான் வந்தேன்; விசனிக்க வேண்டாம். நான் அதிக நேரம் நிற்பதற்கில்லை. என் பாடசாலைக் குப் போவதாக வீட்டில் பொய்யுரைத்து விட்டு வந்திருக்கிறேன். நான் பாடசாலைக்குப் போகவேண்டும். அங்கு ஒரு வேளை என் வீட்டிலிருந்து அந்த அம்மாள் வந்து விட்டால் பெரிய ஆபத்தாகி விடும். நான் சென்று வரட்டுமா?.......

சுகுமா:—(அதிர்ச்சி யடைந்தவனுய்) என்ன! என்ன! உன்னு டைய வார்த்தையின் முடிவு இதுதானு! உனது தீர்மானம் என் னைக் கொலை செய்வதுதானு! கஸ்தூரிபாய்! ஏனிப்படிக் கடின சித் தத்துடன் பேசுகின்ருய்? உன்னை நான் என்னுவியுள்ள மட்டும் மறக்க முடியாது. இது சத்தியம். அதோடு நான் இறந்தாலும் இறப்பேனே யன்றி மறப்பதேன்பது இனி இல்லை. என்னுடைய பங்கில் கடவுள் இருப்பின் எனது காதலுக்கு உயிர் உண்டாகின்றது. இல்லையேல் என் விதி போலாகிறது. கண்ணே! இன்னும் உனது ரகஸியத்தை வெளியிடமாட்டேனென்கிருய்! இதன் உண்மையை நீயே அறியவில்லை என்று நான் நினைக்கிறேன். அதையே நான் அறி யுங் காலத்தைக் கடவுள் காட்டாமலா போவார்? கஸ்தூரிபாய்! ஆரணங்கே! நீ தினம் கடவுளைப் பஜிக்கும்போது இந்த மனிதன் மீது கிருபை செய்ய வேண்டுமென்று பிரார்த்தனை செய்வாயாக. இந்த ஒரு உபகாரம் செய்வாயா! என்னுடைய நிலைமையை நான் எவ்விதந்தான் உடைத்துக் காட்டுவேன்?

திலக:—அன்பா! நன்ருக உடைந்தே இருக்கின்றது. நான் அதை நன்கறிவேன். தாங்கள் கூறியதுபோல எனது உண்மை

அருமைத் தம்பி என்பதும், பெருமை அக்காவென்பதும் தம்பியின் தனிப் படுக்கைக் காலம் வரையில்தான். சோபனமாகிய மறுநாள் காலை யில் எழுந்து வருகையிலேயே ஆசாமியின் தேஜஸ் எந்த விதம் ஜொலிக் கிறது என்பதை அறியலாம். அக்கா வலுவில் ஏதேனும் பேசினுலும் பதில் வருவதும் சற்று யோசனைதான்.

எனக்கே தெரியாது. நான் ஓர் வெள்ளாட்டிபோல நடத்தப்பட்டு வருகிறேனே, இது ஒன்றுதான் எனக்குத் தெரிகிறது. ஆதலால் என் பிழைப்பின் ஆதியும் இதுவே; அந்தியும் இதுவே என்று தீர்மானித்து விட்டேன். நான் வரட்டுமா! நேரமாகிவிட்டது. எனக்கு விடை கொடுக்க வேண்டும்—என்றாள்.

சுகுமாரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. திகைப் பூண்டை மிதித்தவன்போல அப்படியே இரு விழிகளும் நீர் பெருக அபார மான குழப்பத்தை யடைந்துவிட்டான். திலகவதியின் இரு கரங் களையும் பிடித்துக்கொண்டு "கண்மணி! நீ சென்று வா! என்னை மட் டும் மறக்காதே; புறக்கணிக்காதே! கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்பது போல நான் கடவுளையே நம்பி வேண்டுகிறேன். இதற் குள் போகவேண்டுமா! இன்னும் சற்று நேரங்கூட இருக்கலா காதா!....ஆம்!....நீ மகா புத்திசாலி. உனக்கு ஆபத்து வராமல் உன் னைக் காப்பது எனது கடன்; ஆதலால் நீ இந்த பகிரங்கவிடத்தில் அதிக நேரம் தங்குவது பிசகு" என்று கூறிக்கொண்டிருக்கையில் அந்த அறைக்கு வெளியில் அங்கச்சியம்மாளின் குரல் கேட்டது. திடீரென்று திலகவதி தத்தளிப்பான நிலைமையில் கல்லாகிவிட்டாள். திலகவதியின் மூளையே சுழன்றது. "ஐயோ! அன்பரே! அதோ எங்கள் வீட்டு அம்மாளின் குரல் கேட்கிறதே! நான் என்ன செய் வேன்? இது தெரிந்துதான் வந்துவிட்டார்களோ!" என்று கூறிக் கொண்டே கதவினிடுக்கால் பார்த்தாள்.

அங்கச்சியம்மாள் அந்த தையல்காரப் பெண்மணியிடத்தில் "அம்மா! இன்று மாலை 5 மணிக்குள் எனது துணிகள் முற்றும் தைத்துக் கொடுக்கவேண்டும். நாங்கள் இன்று இரவே புறப்பட் டுச் செல்லவேண்டி தந்தி வந்துவிட்டதால் நான் வெய்யிலையும் பார்க் காது வண்டி வைத்துக்கொண்டு வந்தேன். உங்களால் முடியா விட்டால் அப்படியே கொடுத்துவிடுங்கள்" என்றாள். தையல்கார மாது தைத்த துணிகளைக் கட்டிவிட்டு "அம்மா! இதோ இவ்விடத்

கொடுக்கவேண்டிய பணத்தைக் கேட்டால் கோபம்; மனஸ்தாபம். கேளாமல் சமயமறிந்து திருப்பிக் கொடுக்கும் எண்ணமும் இல்லை. பணம் வருவது எப்படி? தர்ப்பணந்தானே!

திலேயே உட்காருங்கள்; நான் அரை மணிக்குள் தைத்துக் கொடுத்து விடுகிறேன்'' என்றாள். அங்கச்சியம்மாளும் சட்டம் போல உட்கார்ந்து விட்டாள்.

ஐயோ! உள்ளே இருக்கும் திலகவதிக்கு எவ்விதம்தானிருக்கும்? உயிர் துடிக்கின்றது; தனக்கு இன்று ஓர் பெரிய ஆபத்து வந்துவிட்டதென்றே தீர்மானித்துவிட்டாள். 'அங்கிருந்து நான் வந்த பிறகு இன்று புறப்படவேண்டிய செய்தி வந்திருக்கிறது. இப்போது இங்கிருந்து அவள் நேரே பாடசாலைக்குச் சென்றால் என்ன செய்வேன்? ஐயோ! அன்பரே! என்னை இச்சமயம் காப்பாற்ற வேண்டும். இந்த அம்மாள் துணிகளை வாங்கிக்கொண்டு பாடசாலைக்குப் போவதற்குள் நான் என் வீட்டையே அடைந்துவிடவேண்டும். அதற்கோர் வழி செய்யவேண்டும். இல்லையேல் இன்று எனக்குப் பெரிய ஆபத்து வந்துவிடும்'' என்று கூறிச் சுகுமாரனின் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

இந்த சந்தர்ப்பத்தைக் கண்டு சுகுமாரன் வியந்தான். என்ன செய்வதென்று திகைத்தவாறு "கண்மணீ! நீ பயப்படாதே! இந்த சமயம் உன்னை எவ்விதமேனும் காப்பாற்றுவது என் கடமை. சற்றும் தைரியத்தைக் கைவிடாதே. நான் அந்த தையல் வேலை செய்யும் மாதுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். அச்சமயம் நீ கீழே இறங்கிப் போய்விடு. நான் மறு நிமிடமே வந்துவிடுகிறேன்'' என்று கூறிவிட்டு "கண்ணே! இனி உன்னைப் பார்க்கும் பாக்கியம் எப்போது கிடைக்குமோ! என்னை மறக்காதே; மறக்கும்படிக்கு உரைக்காதே!'' என்று கூறிவிட்டு அங்கிருந்து தையல் வேலை செய்யும் அந்த அறையினருகில் சென்று அங்கச்சியம்மாள் வெளியில் பார்க்க முடியாதபடி நின்று இந்த பக்கத்து வழியை மறைத்துவிட்டு, ஏதோ தையல் விஷயமாக அவளோடு பேச வாரம்பித்தான்.

ஒருவரை நம்பி இக் காரியம் இவர்களால் ஆகுமென்றிருக்க, அந்த நம்பிய மனிதர்களாலேயே காரியத்திற்குப் பெருந் தடை ஏற்பட, பிறகு நாம் முன்பு நம்பாதவரிடம் உதவியை நாட, அவரால் காரியம் முடிவு பெறுகிறது. உலகமே இவ்விதந்தான்.

அச்சமயம் திலகவதியின் மார்பு படபடவென்று அடித்துக் கொள்ளுகிறது. இப்புறம் அப்புறம் திரும்பிப் பார்க்காமல் ஓட்டமாக ஓடி மெத்தையை விட்டுக் கீழே இறங்கி வந்து, வீதியை அடைந்துவிட்டாள். சுகுமாரன் அவள் சென்றுவிட்டதை யறிந்து நேரே ஓட்டமாக வீதியை அடைந்து ஓர் வண்டி பேசி அதில் திலகவதியை ஏற்றிவிட்டுத் தானும் அவள் எதிர் பாராத விதமாக ஏறி கொண்டான். சுகுமாரன் கூட வருவதில் சந்தோஷம் ஒரு புறம்; துக்கம் ஒரு புறம், இரண்டும் பாதிக்கப்பட்டவளாய் வாளாவிருந்தாள். "கண்ணே! நீங்கள் முதலில் எந்த ஊருக்குப் போகப் போகிறீர்கள் என்பது தெரியுமா" என்றான்.

திலக:—தெரியாது. ஒரு வேளை சென்னைக்கு என்கிறார்கள்; ஒரு வேளை திருச்சிக்கு என்கிறார்கள். இரண்டில் எதுவோ! அன்றி இன்றைய தினம் என்ன புதிய செய்தி வந்திருக்கிறதோ தெரியாது! தாங்கள் இந்த எண்ணத்தைக் கூட மாற்றல் செய்து அனுப்பி விடுங்கள்.—என்று பேசிக்கொண்டிருக்கையில் வண்டி தன் வீடு உள்ள வீதியில் வந்துவிட்டது.

அது கண்ட சுகுமாரன் "கஸ்தூரிபாய்! அதோ உங்கள் வீடு வந்துவிட்டது. நீ இறங்கி விடும் சமயமும் நெருங்கிவிட்டது. நான் உன்னிருப்பிடம் தெரிந்துகொண்ட பிறகு உன்னை வந்து பார்க்கலாமா! அதற்கு அனுமதிப்பாயா?" என்றான்.

திலகவதி கண்ணீர் பெருகியவாறு "இந்த கேள்விக்கு நான் என்ன பதிலளிப்பேன்? தாங்கள் என்னைப்பற்றி விசாரிப்பதும் உபயோகமற்றதாகும்; வந்து பார்ப்பதும் பேராபத்தாகும். ஆகையினால் அது வேண்டாம்; வர வேண்டாம். என்னைப்பற்றிய எண்ணமே அகன்றுவிடும்படிக் கடவுளைப் பிரார்த்தியுங்கள்" என்றாள். அதற்குள் வீட்டு வாசலில் வண்டி நின்றது. "திலகவதி! நான் சென்று வருகிறேன். இதை ஓர் நாடகமாக எண்ணுங்கள். இந்நாட

எந்த சமயமும் வேலையே செய்துகொண்டிருப்பவர்களுக்குச் சிரமமென்பதே தோன்றுதாம். அதே போல அனியாயமே செய்பவர்களுக்குப் பாபமென்பதே கிடையாதென்று ஓர் குருவி கூறுகிறதாம்.

கத்தின் காட்சி இந்த வண்டியோடு முடிந்துவிட்டது. இனி அதை நினைக்கவேண்டாம்.'' என்று கூறிச் சுகுமாரனுக்கு வந்தனம் செய்து விட்டு இறங்கிவிட்டாள்.

வண்டியும் அடுத்த விநாடியே கிளம்பிவிட்டது. சுகுமாரனின் மனம் எப்படித்தானிருக்கும்? தத்தளித்துருகியவாறு அவன் தன்னிருப்பிடம் சென்றான். அன்று முதல் கொண்டே பித்தன்போலாய் விட்டான். திலகவதி வீட்டிற்கு வந்து தான் இந்த கண்டத்திற்குப் பிழைத்ததை எண்ணிச் சற்று சந்தோஷித்தாள்.

அங்கச்சியம்மாள் அங்கு துணிகளைத் தைத்து வாங்கிக் கொண்டு, "திலகவதியை அழைத்துக்கொண்டு வந்தாலன்றோ சாமான்களைக் கட்டுவதற்குச் சரியாகும்'' என்று எண்ணிப் பாடசாலைக்குச் சென்றாள். அங்கு அப்போது பாடம் மும்முரமாக நடந்து கொண்டிருந்ததால் இந்த அம்மாளுடன் யாரும் அதிகம் பேச முடியவில்லை. எனினும் கேட்டதற்குப் பதில் 'திலகவதி அங்கு வரவில்லை' என்று மட்டும் கூறிவிட்டார்கள்.

இது கேட்டதும் அங்கச்சியம்மாளின் இயற்கையவதார குணம் வந்துவிட்டது. "ஆஹ்ஹா! என்னிடம் இவள் பொய் சொல்லி ஏய்த்துவிட்டு எங்கு சென்றுவிட்டாளோ தெரியவில்லை. அன்று ஒரு தடியன் சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டு வந்தானல்லவா! அவனைப் பார்க்கும்போதே சந்தேகமாக இருந்தது. அங்கு தான் சென்றுவிட்டாளோ, என்னவோ! ஆகட்டும்; ஆகட்டும். ஐயோ! பாவம் என்று நான் 5 மணி வரையில் அவளுக்கு உத்திரவு கொடுத்து பாடசாலைக்கு அனுப்பினால் இத்தனை திருட்டுத்தனமா செய்கிறாள்!'' என்று வழக்கத்திற்குச் சற்றும் விரோதமில்லாமல் அதற்கு அதிகமாகவே திட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

இந்த ஆத்திர தேவதையே ஆச்சரியமுறும்படி தங்கப்பதுமையைப்போல உட்கார்ந்திருக்கும் திலகவதியைக் கண்டதும் திடுக்

வினு:—உலகத்தில் யாருக்கப்பா நல்ல பெயரும் கீர்த்தியும் உண்டாகும். சுக வாழ்வு நடைபெறும்?

கிட்டாள். "ஏண்டி! என்னிடம் பாடசாலைக்குப் போவதாகக் கூறி ருயே! வேறு எங்கு சென்று இதற்குள் வந்துவிட்டாய்?" என்று கேட்டாள்.

திலகவதி வெகு சாந்தமாகப் பேசத் தொடங்கி "மாமீ! நான் முதலில் ஓர் பெண் வீட்டிற்குச் சென்றேன். அவளுக்கு ஜுரமாம்; படுத்திருக்கிருள். அவளுடன் பேசிவிட்டுப் பாடசாலைக்குப் போக நினைத்தேன். பாடசாலையில் இன்று பரீக்ஷை என்றும், 5 மணி வரையில் உபாத்தியாயினியைப் பார்க்க முடியாது என்றும் சொல்லிவிட்டாள். ஆதலால் பிறகு பார்த்துக்கொள்வோம் என்று அங்கிருந்து நேரே நான் இங்கு வந்துவிட்டேன். நீங்கள் பாடசாலைக்குப் போனீர்களா?" என்று கேட்டாள்.

அங்கச்சியின் கோபம் சற்று சமன மாயிற்று. பிறகு "சாமான்களை எல்லாம் மூட்டை கட்டு. இன்றிரவே நாம் புறப்பட வேண்டுமாம்" என்று ஆக்ஞாபித்தாள். பிறகு வெகு சுறுசுறுப்பாக வேலை நடந்தது. கணபதி டிக்கட்டு சகிதம் வீட்டிற்கு வந்தார். சில ஆட்களின் மூலம் சகலமான சாமான்களையும் கட்டி லக்கேஜில் போட்டுப் பிறகு தாங்களும் பிரயாணமானுர்கள்.

ரயில்வே ஸ்டேஷனில் வந்து வண்டி ஏறினுர்கள். கூட்டம் அசாத்யமாயிருக்கிறது. ஓர் விளக்குத் தூணின் பக்கத்தில் சுகுமாரன் வாடிய முகத்துடன் நின்றுகொண்டிருப்பதை, வண்டி புறப்படும் சமயத்தில் திலகவதி பார்த்துவிட்டாள். வெகு ரகஸியமாக மனத்திற்குள் ஆழமாகப் புதைந்து கிடக்கும் ரகஸிய உணர்ச்சி எத்தனை தடுத்தும் கண்கள் வழியாக எட்டிப் பார்க்கின்றது. சுகுமாரன் ஊமைபோல வண்டியிலிருக்கும் பதுமையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வண்டியும் ஊதிக்கொண்டே புறப்பட்டு விட்டது. புகைத் துடரைப் போன்ற மனோ வேகமும், பல பிரயாணிகள் அடங்கி

விடை:—ஊரார் குடியைக் கெடுத்து, அவர்களைப் பிரித்து, த்வேஷத்தை உண்டாக்கி, அகப்பட்டதை அமுக்கி, ஏப்பம் விட்டு அந்த பணத்தைக் கொண்டு பெரிய மனிதராக நடிக்கின்றுர்களே அவர்களுக்குத்தான் எல்லா சுகமுமுண்டு.

யுள்ளது போல அனேக எண்ணங்களும் அடங்கப்பெற்ற மனத்துடன் திலகவதி கையை வெளியில் நீட்டித் திடீரென்று "மாமீ! என்னுடைய பாட்டு டீச்சர் அதோ இருக்கிறார்கள். நான் போய் விட்டு வருகிறேன். என் ஞாபகமிருக்கட்டும்." என்று கூறிக் கையை ஆட்டினாள்.

சுகுமாரனுக்கும் இது ஆச்சரியமாகி விட்டது. அவனும் கூடிய வரையில் ஜாடை செய்தான். வண்டியும் வெகு தூரம் சென்று மறைந்து விட்டது. அங்கச்சியம்மாள் "வாத்யாரம்மாளு மாச்சு. ஐயாவுமாச்சு. உட்காரு" என்று இழுத்துத் தள்ளினாள். பிறகு சென்னை வந்து சேர்ந்தார்கள். சென்னையில் 4 மாதங்கூடத் தங்கவில்லை. பெங்களூருக்கு மாற்றிவிட்டார்கள். அதன் பிறகு சில மாதத்தில் மீண்டும் சென்னைக்கே மாற்றினார்கள்.

சுகுமாரனும் சென்னைக்கு வந்த காலத்தில் இவர்களைப்பற்றி விசாரித்தான். தகவல் தெரியாமையினால் இந்த ஏக்கம் அவன் மனத்தைக் கப்பிக்கொண்டது. எத்தனையோ விதம் விசாரித்துப் பார்த்தான்; பயனில்லை. அதன்பிறகே அவனுடைய துயரம் தாங்காமல் தவிக்கையில் சில சிநேகிதர்கள் படிப்பதற்காக சீமைக்குச் சென்றார்கள். அவர்களோடு சுகுமாரனும் சென்று படித்து நாம் முன்பு தெரிவித்தபடி வந்து சேர்ந்தான் அதன் பின்னரே திலகவதியும் அவனும் சந்தித்தது.

(மேற்குறித்த வரையில் பூர்வகதை என்பது நம் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். விசனம் மிகுந்த காலத்தில் பழங்கால நினைவுகள் உண்டாவது சகஜம் என்றும் திலகவதி அங்ஙனமே தன்னு

வினா:—இந்த மகாத்மா காந்தி செய்வது பெரும் அக்ரமம். ஆதித்திராவிடர்களின் விஷயமாக பிராம்மணீகத்திற்கு விரோதமாய் சனாதனிகளின் வயிறு எரியச் செய்வது நியாயமா!

விடை:—பிராம்மணர்கள் பிணம் அறுக்கவும், ஜந்துக்களை வளர்த்துக் கொல்லவும் எந்த சாஸ்திரத்தில், பிராம்மணீகத்தில் சொல்லி இருக்கிறதய்யா! அதேபோல சாஸ்திரம் இதற்கு மட்டும் இறந்துவிட்டதா! சனாதன தர்மத்தில் இதைக் கொட்டை எழுத்தில் கூறியிருக்கிறதோ!

டைய பூர்வ கதைகளை நினைத்து விசனித்தாள் என்றும் தெரிவித்தோமல்லவா! இனி நிகழ் காலக் கதையைத் தொடங்குவோம்.)

* * * * *

மேற்குறித்த சம்பவங்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எண்ணி எண்ணி அதனாலுண்டாகும் இன்ப துன்பங்களை எல்லாம் அனுபவித்துச் சோர்ந்து அப்படியே அசைவற்றுத் தூங்கி விழுந்து விட்டாள். தூக்கத்தில் கனவிலும் அவ் விஷயங்களே வந்து அவளை அடியோடு மயக்கி விட்டன. தான் தூங்குகிறோம் என்பதையே மறந்து விட்டாள்.

அங்கச்சியம்மாளின் குழந்தைகள் இரண்டாம் வேளை சாப்பாட்டிற்கு வந்தன. திலகவதி தூங்குவதைப் பார்த்துத் தம் தாயாரிடம் தெரிவித்து விட்டன. அங்கச்சியம்மாள் ஏற்கெனவே திலகவதியின்மீதுள்ள கோபாவேசத்துடன், தன் குழந்தைகள் சாப்பிட வரும் வேளையில் தூங்குவதைக் கண்டதும் பின்னும் கோபித்தவாறு உள்ளே வந்து "ஏ மூதேவி! பகல் வேளையில் தூங்கி என் குடியைக் கெடுக்கிறாயா? மணி 8 அடிக்கப் போகிறது. குழந்தைகளின் நினைவு மறந்து விட்டதா?" என்று கூச்சலிட்டவாறு, காலால் எட்டி உதைத்தாள்.

அதுவரையில் இவ்வுலகத்தையே விட்டுச் சென்றவள்போல மெய்ம்மறந்து தூங்கிக்கொண்டிருந்த பேதை இந்த பலமான உதை விழுந்த தக்ஷணமே நடுங்கி, பதறிப்போய், பெருங் குழப்பமடைந்து கனவின் கலக்கம், தூக்கத்தின் மயக்கம். எல்லாம் ஒன்றுகூடித் தடுமாறிய வண்ணம் எழுந்தாள். "ஆ!.... ஆ!.... மா.... மி!.... ஏ.... ன்... இதோ, இதோ!... மாமி..." என்று ஏதோ பிதற்றுகிறாள்.

வினா:—ஏனய்யா! உலகத்தில் போட்டியே அதிகரித்து விட்டது. ஒரு பத்திரிகையைப் பார்த்து இன்னொன்று போட்டி போடுகிறது. ஒரு கடையைப் பார்த்து இன்னொரு கடை போட்டி போடுகிறது. இந்த போட்டியை தேச நன்மையில் செய்யலாகாதா?

விடை:—அதிலும் நிறைய பணங் கிடைப்பதாயின் செய்வார்கள். தேசமோ! மோசமோ! பணம் வருமாயின்!......

அங்கச்சியம்மாள் இதைக் கண்டு சற்றும் இரக்கமின்றி அவள் தலையைப் பிடித்து இரண்டு மூன்று தரம் ஆட்டிவிட்டு "என்னடி! குடியனைப்போலப் பிதற்றி ஆடுகிறாய்! ஜாக்ரதை! இன்னும் தூக்கம் தெளியவில்லையோ! உம்! விழித்துக்கொள்ளு. குழந்தைகளுக்குச் சாப்பாடு போடு." என்று பெரிய சத்த மிட்டாள்.

தலையைப் பிடித்து ஆட்டிய பிறகு சற்று தெளியப் பெற்றவளாய் எழுந்து, முகத்தை அலம்பிக்கொண்டு குழந்தைகளுக்குச் சாப்பாடு போட்டாள். அவைகளுக்குத் தலைவாரிப் பின்னி, குளிப்பாட்டி, நல்ல சொக்காய் போட்டு, பொட்டிட்டு ஒழுங்குபடுத்தி யனுப்பினாள். மணி 4 ஆகிவிட்டது. சமையலுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானாள். தான் அன்றைய தினம் எவ்விதம் சுகுமாரனைக் காண்பது. எவ்விதம் வெளியில் செல்லக்கூடும், என்ற யோசனையே பெரிதாகிவிட்டது.

மணி ஏற ஏற அவள் வேதனையும் பயமும் ஏறிக்கொண்டே வருகிறது. "8 மணிக்கு சுகுமாரன் வந்து கோயிலில் காத்துக் கொண்டிருப்பானே! என்ன செய்வது?" என்று மிகவும் வருந்தியவாறு 'அதற்கு என்ன வழி செய்யலாம்?' என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

மணி 8 அடிக்கப்போகிறது. 7 மணிக்கே குழந்தைகளுக்குச் சாப்பாடு போட்டுவிட்டாள். வீதியில் தான் வந்து நிற்பதென்றால் அங்கச்சியம்மாளின் ஸ்வரூபம் அவளை நடுக்கலுறச் செய்கின்றது. ஆதலால் அந்த வீட்டு வாசப்பக்கத்து அறையின் ஜன்னல் வழியாக எதிர்ப்பக்கத்திலுள்ள விநாயகர் கோயிலைப் பார்த்துக்கொண்டே நின்றாள். காந்தி குல்லாயுடன் சுகுமாரன் அந்த

வினா:—மூன்று தரம் வட்ட மேஜை மகா நாடு கூடிற்றே! என்ன பலன் கிடைத்தது?

விடை:—பல ப்ரமுகர்கள் அரசாங்க விருந்தினர்களாகச் சென்று அக்கரை தேசத்தின் அருமையைக் கண்டு ஆநந்தித்து வந்தார்களே அது பலனல்லவா?

விநாயகர் கோயிலுக்கு ஏழு மணிக்கே வந்து வட்டமிட்டுக்கொண்டு நின்றான்.

21004

திலகவதிக்கு எந்த வழியிலும் அவனைப் பார்க்க முடியவில்லை. கணபதி முதலியோர் சாப்பாட்டிற்கு வந்துவிட்டார்கள். அந்த வேலையினால் திலகவதி உள்ளேயே தங்கிவிட்டாள். அன்று திலகவதிக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்கிற விசாரத்துடன் சுகுமாரன் வெகு நேரம் நின்று பார்த்தான். ஒன்றுமே தகவல் கிடைக்கவில்லை. "மணி 9-30 ஆகிவிட்டது. இனி உபயோகமில்லை. வீட்டை அடைய வேண்டியதுதான்" என்று தீர்மானித்தான். அதற்குள் அவனுக்கொரு யோசனை தோன்றியது.

ஏற்கெனவே அவன் பம்பாயில் கணபதியைப் பார்த்திருப்பதனால் அவன் உள்ளே செல்லும்போது 'இந்த வீடுதான் அவர்களுடையது' என்று தெரிந்துகொண்டான். தான் யாரோ பாட்டைசாரி போல அவ்விடம் வந்து வீதியில் நின்று "அம்மா! அம்மா!" என்று அழைத்தான். இக்குரலைக் கேட்டதுமே திலகவதிக்கு இன்னாரென்று தெரிந்துவிட்டது; அவளை திக்கென்று வாரிப்போட்டது.

"யாரது!" என்று அதட்டியவண்ணம் அங்கச்சியம்மாள் வீதியில் பிரஸன்னமானாள். சுகுமாரன் வெகு தாழ்மையான குரலால் "அம்மணீ! நான் அயலூர். தாகம் அதிகமாக இருக்கிறது. புளித்த மோர் கொஞ்சம் கொடுத்தால் புண்ணியமுண்டு" என்றான். இதைக்கேட்ட அங்கச்சியம்மாள் அவனுடைய காந்தி குல்லாயைப் பார்த்துவிட்டுச் சீறியவளாய் "அப்பா! போதும்! போதும்! நீ முத

வினா:—ஏனப்பா முகம் இவ்விதம் ஆய்விட்டது! விழிக்கிறாய்?

விடை:—ஐயோ! அந்த நாவிதப் பயலின் குழாவில் வெகு அருமையான தோடி ராகம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறது. தன்யாசியிலும், பிலகரியிலும், கேதாரத்திலும், சங்கராபரணத்திலும் அந்த தோடி ராகத்தைக் கட்டி உதைத்து அந்தப் பயல் கொலை செய்கிறான். தோடி படும் பாட்டை நோக்கின் எனக்குப் பரிதாபமாக விருக்கிறது! என்ன செய்வேன்?

யில் இவ்விடத்தை விட்டு எழுந்திரு. உன் காந்திக் குல்லாயுடன் நீ இருப்பதை யாரேனும் பார்த்தால் இக்காலம் படும் பாட்டில் காங்கிரஸ் தொண்டனை ஆதரித்த வகையராக்களில் எங்களையும் சேர்த்துவிடுவார்கள். எங்கள் வேலையில் மண் விழுந்து விடும். மோருமில்லை; நீருமில்லை. போ'' என்றாள்.

இதைக் கேட்ட சுகுமாரனுக்கு ஒரு புறம் அடக்க முடியாத நகைப்பு வருகிறது. அதை வெளிக்காட்டாமல் பேசத் தொடங்கி ''தாயே! காங்கிரஸ் தொண்டன் என்றதனாலேயே உங்களுக்குப் பங்கம் வராது. நாக்கை வரட்டுகிறது.'' என்று அவன் கூறி முடிக்கு முன் கணபதி, கணபதிபோலப் புசித்துவிட்டு, தொப்பையைத் தடவிக்கொண்டு பெரிய ஏப்பம் விட்டவாறு வீதியில் வந்து விஷயத்தை யறிந்தார்.

''அப்பா! இந்த குல்லாயைப் பார்த்தாலே எங்களுக்குப் பயம்தான். ஏதோ தாகம் என்றதால் கொஞ்சம் மோர் கொடுக்கிறேன்; குடித்துவிட்டுப் போய்விடு. இதை வெளியில் சொல்லாதே. சொன்னால் பெரிய ஆபத்துதான் வந்துவிடும். திலகவதீ! திலகவதீ! கொஞ்சம் புளித்த மோர் ஒரு லோட்டாவில் கொண்டு வா!'' என்றார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல திலகவதி மோரை எடுத்துக்கொண்டு வந்து கணபதியின் கையில் கொடுத்துவிட்டு ஒன்றும் தெரியாதவள் போல ''மாமா! இவர் வாலண்டியர் போல விருக்கிறதே! நம்ம வீட்டிற்கு வரலாகுமா?'' என்றாள். கணபதி ''போனால் போகிறது. இராக்காலம்; யார் பார்க்கப்போகிறார்கள்?

வினா:—பத்திரிகை படிக்கிறாயே! நம் தேசீய விஷயம் உண்மையில் எப்படி இருக்கிறது. படித்துச் சொல்லு.

விடை:—ஐயோ! தேசீய விஷயமா! மனத்தில் நினைத்துக்கொண்டு படுத்துக்கொள். ஒருகால் கனவில் உண்மையான விஷயம் வரும். பெரிய பத்திரிகைகளில் அம்மாதிரியான விஷயமே வராது. விளம்பரங்கள் வேண்டுமானால் வேண்டியது காணலாம்.

தாகமென்றல் தண்ணீர் கொடாமலிருப்பது கொடிய பாப மன்றோ?'' என்றான்.

சுகுமாரனிடம் எப்படியாவது சேர்ப்பிக்கவேண்டு மென்று ஒரு சிறிய துண்டுக் காகிதம் எழுதி வைத்துக்கொண்டிருந்த திலக வதி அதை அந்த மோர் டம்ப்ளரில் போட்டுவிட்டாள். அப் போதே போட்டதாகையால் ஊற நேரமில்லை. சுகுமாரன் வாயில் மோரை வார்த்துக் கொண்டதும் வாயில் தொப்பென்று ஏதோ விழுந்தது. உடனே 'அது என்னதோ! பாசையோ! பல்லியோ!' என்று சந்தேகித்தான். அதை பகிரங்கப் படுத்த எண்ணினன்.

உடனே "திலகவதியின் அஜாக்ரதையினல் தான் அவ்வாறு விழுந்ததென்று அவளுக்கு டோஸ் விழும். எதுவாயினும் கிருஷ் ணார்ப்பணம்'' என்று எண்ணி, வாயைத் துடைப்பது போலத் துணியை வாயருகில் கொண்டு, துணிக்குள் அதைத் துப்பிச் சுற்றி வைத்துக்கொண்டு வெளியில் சென்று பார்க்க நினைத்தான். மோரைக் குடித்துவிட்டு "ஐயா! மெத்த வந்தனம். தாயே! நமஸ்காரம். நான் போய் வருகிறேன்.'' என்றான்.

இதையே ஓர் ஆதாரமாகக் கொண்ட திலகவதி "ஐயா! நீங்கள் காந்திக்காரர்கள். ஆகையினல் இனிமேல் இங்கு வரவேண் டாம். வந்தால் பெரிய ஆபத்தாக முடியும்.'' என்று தன் கருத்தை வெளியிட்டுக் கூறிவிட்டு, டம்ப்ளரை எடுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள். சுகுமாரனும் இச்சொல்லின் கருத்தை யுணர்ந்து மனந்தவித்தவாறு போய்விட்டான். பிள்ளையார் கோயில் வெளிச் சத்தில் அந்தத் துணியில் என்ன இருக்கிறதென்று பார்த்து அபாரமான பிரமிப்பை அடைந்தான்.

வினு:—ஐயோ பாவம்......அந்த ப்ரபுவின் மனைவி இறந்துவிட்டா ளாமே!

விடை:—தேசபக்தியற்ற கட்டையிடம் அந்த அம்மாள் பட்ட கஷ் டம் நீங்கி அவள் இறந்ததுபற்றி மிக்க சந்தோஷ மடையுமய்யா! இந்த இடத்தை விடச் சென்ற விடத்தில் அந்த அம்மாள் சந்தோஷமாகவே இருப்பாள்.

திலகவதியின் சாமர்த்தியத்தை எண்ணி மிக்க சந்தோஷித்தான். அக்கடிதச் சுருளை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று பிரித்துப் பார்த்தான். அதில்

"என் அன்புக்கினிய.........

நான் ஏற்கெனவே இரண்டு வருடங்களுக்கு முன்பு சொல்லிய வார்த்தைகளை இப்போது ஊர்ஜிதமாகக் கூறுகிறேன். இனி நான் இந்த சிறைச் சாலையை விட்டு வெளியேறும் பிரமேயமே இல்லை. ஆதலால் இனி தங்கள் மனத்தை முற்றிலும் மாற்றிவிட்டுச் சந்தோஷமாக வாழ்க்கைத் துணைவியைத் தேடிக்கொண்டு வாழ்க்கையை நடத்துங்கள். என்னுடைய பிறவியில் அணுப் பிரமாணமாவது அதிர்ஷ்டமென்பது இருக்குமாயின் என்னுடைய ஆயுள் காலத்திற்குள் தங்கள் வீட்டில் அடிமை வேலைக்காரியாகவாவது வேலை செய்து களிக்கக் கடவுள் கிருபை செய்வார் என்று நினைக்கிறேன். எக்காரணம் பற்றியும் தாங்கள் இனி இந்தப் பக்கமே வரக்கூடாது. இதை மறக்கவேண்டாம். இ. உ. பி..."

என்று வரைந்திருந்ததைப் படித்தான். அதற்குமேல் விவரித்தலே அவச்யமன்று. அதன் பிறகு அவன் திலகவதியைக் காணவே இல்லை. திலகவதியும் வீட்டிலேயே ஐக்யமாகிவிட்டாள். வீதிப் பக்கம்கூட அங்கச்சியம்மாளின் ஆக்ஞையின்பேரில்தான் செல்ல வேண்டும். அத்தகைய நிலைமை வந்துவிட்டதால் திலகவதியின் ஆதி நாடகம் அடியோடு மறைந்துவிட்டது. இவ்விதமே சில மாதங்கள் கடந்தன.

இதற்குப் பிறகுதான் அங்கச்சியம்மாளின் அதிர்ஷ்ட காலத்தைக் குடுகுடுப்பைக்காரன் எடுத்துக்கூறியது. புதையல் விஷய

வினா:—என் விசனமாக இருக்கிறாய்! விசேஷமென்ன?

விடை:—எனக்கு 25 ரூபாய் சம்பளமாக விருக்கையில் 2 ரூபாயில் புடவையை என் சம்சாரம் கட்டினாள். குடித்தனம் சிராக விருந்தது. எனக்கு சென்ற மாதம் வேறு ஆபீஸில் 50 ரூபாயிக்கு வேலை கிடைத்தது. இந்த தகவலை நான் என் நண்பரிடம் கூறியதை என் மனைவி கேட்

மாக நாம் முன்பு தெரிவித்த சகலமும் நடைபெற்றன. மரத்தோடு மரமாக அங்கச்சியம்மாள் கட்டுண்டு 'குய்யோ! முறையோ!' என்று கதறும் சத்தத்தை அந்த வேளையில் நல்ல நித்திரையிலுள்ள யாரும் கவனிக்கவில்லை.

ஆதலால் "நிஜமான கள்வர்கள் இங்கு வந்து உபத்திரவிக்கப் போகிறார்களே!" என்ற பெருந்திகில் உண்மையிலேயே அந்த அம்மாளை பாதித்து வதைக்கிறது. வீட்டின் ஒரு கோடியாகையினால் இந்த பக்கம் சத்தமிடுவதை யாருமே கவனிக்கவில்லை. சத்தமிட்டு இட்டு அங்கச்சியம்மாளின் தொண்டை வலித்துக் கட்டிக்கொண்டது. "தம்பி முதலியவர்கள் ஓடிப்போய் விட்டார்களே! என்ன செய்வது?" என்று மிகுந்த பயத்தோடு இருக்கையில் மெத்தை மேல் விளக்கு வெளிச்சம் தெரிவதைக் கண்டு பலமான சத்தமிட்டாள்.

கணபதிக்கு ஆபீஸ் வேலை அதிகமாகவிருந்ததால் அவர் கண் விழித்துக் கொண்டார். அங்கச்சியம்மாளின் குழந்தைகள் கத்துகின்றன. ஒன்றை திலகவதி வைத்துக்கொண்டு தத்தளிக்கின்றாள். 'அங்கச்சியம்மாள் எங்கே போயிருப்பாள்?' என்று தெரியாமையால் கணபதியினிடம் வந்து "மாமா! வெகு நேரமாகக் குழந்தை கத்துகின்றது. மாமி எங்கேயோ தெரியவில்லை." என்றாள். அதன் பிறகே அங்கச்சியம்மாளைப் பற்றித் தேட வாரம்பித்தார்கள். எங்கு போயிருக்கக்கூடும் என்று வீட்டில் உள்ள இடத்தில் எல்லாம் பார்த்தும் காணாமையினால் கணபதிக்கு மிகுந்த யோசனை யுண்டாகி விட்டது.

"இரவில் குழந்தையை விட்டுவிட்டு எங்குசென்றிருப்பாள்?" என்று ஒரு விதமான கலக்கத்தோடு அவ்வீடு முற்றுந் தேடியவாறு தோட்டத்துப் பக்கம் வந்தார். அச்சமயம் அங்கச்சியம்மாளின் தீன குரலைக் கேட்டு, திடுக்கிட்டுப் பின்புறம் ஓடி வந்தார். வேலைக்

டிருந்து உடனே கடைக்குச் சென்று 25 ரூபாயில் பட்டுப் புடவை வாங்கி வந்து விட்டாள். முதல் மாத சம்பளத்திற்கே 25 ரூபாய் புடவையானால் முற்றும் காலந் தள்ளுவதெவ்விதம் என்று விசனிக்கிறேன்.

காரர்களை எழுப்பிக்கொண்டு தோட்டத்துக்கு விளக்கோடு சென்று, குரல் வந்த விடத்தை நோக்கினர்.

அவர் வருவதைக் கண்ட அங்கச்சியம்மாள் "ஆ! மோசம் போய் விட்டேன் பேராபத்து வந்துவிட்டது. கள்ளன். கள்ளன்" என்று பலமாகக் கத்திப் புலம்பினள். இதற்குள் குழந்தையை விட்டு விட்டுத் திலகவதியும் ஓடி வந்தாள். இந்த கோரமான பயங்கர சம்பவத்தைக் கண்ட கணபதி "ஐயோ! இதென்ன அனியாயம்! அங்கச்சி! அங்கச்சி! நீயா கட்டுண்டு கிடக்கிறாய்!" என்று கூறிக் கொண்டே அவளுடைய கட்டை யவிழ்த்தார். திலகவதியும் "மாமீ! இதென்ன ஆபத்து!" என்று கூறிக்கொண்டே சகாயம் செய்தாள்.

அங்கச்சியம்மாளின் அலங்கோலமான வேஷத்தைப் பார்த்து கணபதி நடுக்கலுற்றுத் திகைத்து "இதென்ன வேஷம்? நடந்த விஷயமென்ன?" என்று கேட்டார். அங்கச்சியம்மாள் கத்திக் கத்தி அலுத்துப்போய்விட்டதால் ஒன்றும் பேச முடியவில்லை. திலகவதி தண்ணீர் கொண்டு வந்து அவளது முகத்தைக் கழுவித் தண்ணீரை குடிக்கச் செய்தாள். மொடமொடவென்று செம்பு தண்ணீரைக் குடித்துப் பெரியதோர் ஏப்பமும் விட்டுக் கொண்டு "ஐயோ! நான் தேகபாதையின் நிமித்தம் புறக்கடைப் பக்கம் வந்தேன். நான் வந்து திரும்பிப்போகையில் நாலு முரடர்கள் இங்கு எப்படியோ வந்து என்னைத் திடீரென்று கீழே தள்ளி, மென்னியை அழுத்தினர்கள்.

என் பிராணன் துள்ளியது. நான் கூச்சலிடாதபடி வாயில் துணியை அடைத்து விட்டு என்னுடைய நகைகளை எல்லாம் கழற்றிக்கொண்டு என்னை மரத்தில் கட்டி விட்டுப் போய் விட்

வினு:—கையில் பண நடமாட்டம் அதிகம்போலிருக்கிறது. கல கல வென்று சத்தம் கேட்கிறதே!

விடை:—ஆமாம். தந்திர மற்றவர்கள் இக் காலத்தில் பிழைக்க முடியாது. இந்த ஓசையைக் கேட்டால்தான் பத்து சினேகிதர்கள் என்னை யண்டுவார்கள். அவர்களுடன் தினம் ஓட்டலுக்குச் சென்று ஒவ்வொருவர் கணக்கில் ஒவ்வொரு நாள் சாப்பிட்டு வாழலாம்.

டார்கள். அப்போதிலிருந்து கத்துகிறேன்; என் தொண்டையும் வரண்டு விட்டது'' என்றுள். இது கேட்ட கணபதி மிகுந்த திகிலடைந்து புறக்கடை முற்றும் சுற்றிப் பார்த்தார்.

கதவு திறக்கப்பட்டும், சுவர் இடிந்தும் இருப்பதால் கள்ளர் வந்து சென்றதற்கு நன்றாக அடையாளம் தெரிந்து விட்டது. போலீஸுக்கு அந்த நிமிடமே கணபதி தகவல் அனுப்பி விட்டார். உடனே போலீஸ் புலிகளெல்லாம் அட்டகாஸமாய் வந்து விட்டார்கள். அவர்களுடைய தோரணைப்படிக்கு அங்கச்சியம்மாளிடம் வாக்கு மூலம் வாங்கிக் கொண்டு நகைகளின் மதிப்பு ஜாப்தா எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

அதன் பிறகே அங்கச்சியம்மாள் தனது பிரதம நாடகத்தின் பிரதமக் காட்சியில் வெற்றி பெற்றதாக எண்ணி, மனத்திற்குள் அபார சந்தோஷமடைந்தாள். அவளுடைய கௌரவத்திற்குக் குறையாதபடி அன்றே கணபதியைத் தொந்தரவு செய்து வைரக் கம்மல் வாங்கிப் போட்டுக்கொண்டு மற்றபடி உள்ளே இருந்த சாதாரண நகைகளை அணிந்து கொண்டாள்.

அங்கச்சியம்மாள் வீட்டில் அதிசயமான களவு போன விஷயத்தைப்பற்றி விசாரிப்பதற்காக எல்லோரும் வந்து கொண்டே இருந்தார்கள். இரவு 8 மணிக்கே அங்கச்சியம்மாளுடைய தம்பி சோமு என்பவன் வந்து விட்டான். அவனைக் கண்டால் கணபதிக்குப் பிடிக்காது. அவனுடைய சகவாஸம் சரியாக இல்லை என்பது பற்றி எத்தனையோ விதத்தில் கண்டித்தும் அவன் கேளாமையினாலும், அவனுடைய விவாக விஷயத்தில் மனஸ்தாபம் உண்டாகி விட்டதனாலும் அவனை அவர் வெறுத்தே வந்தார். ஆதலால் அவன் இப்போதும் அங்கச்சியம்மாளிடம் நேரில் பேசவந்தானே யன்றி கணபதியின் முன்பு வரவில்லை.

வினு:—லாட்டரியில் பணம் வந்ததாமே! என்ன விதம் செலவழிக்கப் போகிறுய்!

விடை:—இதுவரையில் ஒருவரிடமே கடன் வாங்கி வெகு காலமாகக் கட்டிக்கொண்டே வந்தேன். அவருக்கு அன்று முதல் வட்டியோடு கொடுத்து விட்டேன். மிச்சம் 100 ரூபாய்கூட இல்லை.

இவனைக் கண்ட அங்கச்சி மரியாதையாக உட்காரவைத்தாள். "அக்கா! இரவு நடந்த விஷயங்கள் ஏதேனும் வெளியாகி விட்டனவா! எப்படி முடிந்தது.?" என்றான்.

அங்:—அப்பா! கடவுள் கிருபையால் ஜெயமே அடைந்தேன்; நான் அந்த யோசனை செய்திரா விட்டால் என் கதி என்னவாகி இருக்குமோ தெரியாது! நான் செய்த சூழ்ச்சியில் ஒரு வித சந்தேகமும் இல்லாது போய் விட்டது. இரவே போலீஸ்காரர்கள் வந்தார்கள். எல்லாவற்றையும் எழுதிக்கொண்டு போனார்கள்; அந்த காட்டில் நாம் எதிர்பாராது கள்வர் எவ்விதம்தான் வந்தார்கள்? இது எனக்குப் பெரிய விசனமாயிருக்கிறது.

சோமு:—ஆமாம். நானும் இதைப் பற்றி வெகு நேரம் யோசித்தேன். குடுகுடுப்பைக்காரனோ செய்திருப்பானோ என்று சந்தேகித்தேன். அவன் தான் செய்யவில்லை என்று சத்யமும் செய்கிறான். அவனுடைய துணி, பணம் எல்லாம் போய் விட்டது பற்றிக் கண்ணீர் விட்டான். மனித சஞ்சார மற்றவிடமல்லவா! கள்வர் வசிப்பது சகஜந்தானே! அக்கா! நான் உனக்கு இந்த விஷயத்தில் உபகாரம் செய்வதற்குப் பகிரங்கமாக வராவிட்டால் எப்படி முடியும்? என்னுடைய வாரண்டுக்காகத் தலைமறைந்தன்றோ இருக்கிறேன். 500 ரூபாயைக் கட்டித் தொலைத்துவிட்டால் எனக்கு நிர்ப்பயமாகிவிடும். இனிமேல் அல்லவோ புதையல் விஷயமாக அதிக வேலை இருக்கிறது. என்ன சொல்லுகிறாய்?

அங்க:—சோமூ! நீ மிகவும் அவசரமாகக் கேட்டால் நான் என்ன செய்வேன்? 10 தினங்களாவது பொறுத்தாயானால் நான் உனக்குக் கட்டாயம் உதவி செய்வேன். புதையலிலும் உனக்குப் பங்கு கொடுக்கிறேன். இன்றே எனக்கு வைர ஓலை வேண்டுமென்று ஆகாத்யம் செய்துப் பணங்கேட்டேன். அதைக் கொடுத்தால் அந்த

பெரிய டாக்டரா யிருந்தாலும்கூட சில விஷயத்தில் ஏமாந்து விடுகிறார்கள். அதேபோல தம்பிடிக்கு தம்பிடி வட்டி வாங்கும் பேர்வழிகளுக்குக்கூட சிலரிடமிருந்து மஞ்ச கடுதாசி (Insolvency Notice). வந்துவிடுகின்றது.

பணத்தில் உனக்கும் கொஞ்சம் கொடுத்துவிட்டுப் படையலுக்கும் செலவு செய்யலாம் என்று எண்ணினேன். நான் நினைத்ததற்கு நேர்மாறாக அவரே நேரில் பி. ஆர் & ஸன்ஸுக்குச் சென்று கம்மல் வாங்கி வந்து விட்டார். நான் என்ன செய்வேன்?

சோமு :—ஏன் அக்கா! அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டா யாஞல் அவர் தோடு எங்கே என்றால் என்ன சொல்லி இருப்பாய்?

அங்க :—அதற்கென்ன இப்பட்டணத்தில் குறைவா! ஜர்மன் கமலத்தில் வாங்கிப் போட்டுக்கொள்வது. அவர் கண்டாரா? பின் னும் சில தினம் கழித்து அதுவும் கெட்டுவிட்டதென்று நீலித்தனம் செய்து மீண்டும் வாங்குவது. இந்த அங்கச்சிக்கு இது தெரியாதா!

சோமு :—அக்கா! ஒன்று செய்யலாமே! அவருக்குத் தெரி யாமல் இந்த கம்மலை விற்றுப் பணமாக்கி விடுவது. பிறகு நீ சொல் லியது போலச் செய்துவிட்டால் என்ன? நான் ஜர்மன் கமலத்தில் முதல்தரக் கம்மல் வாங்கி வருகிறேன். நீயே நேரில் வா; கடைக் குச் சென்று விற்றுவிடுவோம்—என்றான்.

இதுவும் அங்கச்சியம்மாளுக்கு யுக்தமாகத் தோன்றியதால் மறுதினமே அவர்கள் யோசித்தபடி, கணபதி ஆபீஸுக்குப் போயி ருக்கையில் செய்து விட்டார்கள். சோமு 500 ரூபாய் ரொக்கத் தைப் பெற்றுக்கொண்டான். சந்தோஷமாகச் சலாம் செய்து கொண்டே சென்றான். அன்று முதல் பகிரங்கமாகவே பகலிலும் வரத் தலைப்பட்டான். “அக்கா! குடுகுடுப்பைக்காரனுக்கு அன்று கையிலிருந்த பணம் எல்லாம் செலவாகி விட்டதால் 10 ரூபாய் செலவுக்கு வேண்டுமாம். அவனுக்கு உன்னைக் கேட்க வெட்கமா யிருக்கிறதாம். அவனுக்கு நீ இந்த சமயம் உதவி செய்ய மறுத்து விட்டால் மனவருத்த முறுவான். புதையல் விஷயத்தில் சிரத்தை

நம் வீட்டிற்கு வரும் சிலரைக் கண்டால் சந்தோஷமாக இருக்கிறது. பின்னும் சிலரைப் பார்க்கும்போதே அருகிலுள்ள புத்தகங்கட்கு ஆபத்து வந்து விட்டதென்று திடுக்கிடுகின்றது. ஆனால் அவர்களுக்கு புத்தகத்தைப் பார்க்கும் போதே சந்தோஷம் பொங்குகின்றது. எலியும் பூனையும் சமா சாரம் போலல்லவோ இருக்கிறது இது?

குறையும்'' என்று நைஸாகக் கூறி, 10 ரூபாயை வாங்கி குடுகுடுப் பாண்டிக்குக் கொடுத்தான்.

நன்றாகக் கறக்கக்கூடிய கறவை மாடு கிடைத்தால் அதை உடனே ஒட்டக் கறந்து விடுவதாலன்றோ பலன் கிடைக்கும்! அந்த நோக்க மறிந்துச் செய்வதில் நமது சோமு வெகு கெட்டிக்காரன். அவன் தினம் வருத்துப் போக்கு வைத்துக்கொண்டது கணபதிக்குப் பிடிக்கவில்லை; எனினும் பேய்க்குப் பயந்து பேசாதிருந்தான். வழக்கம் போல வந்த சோமு ஒரு தினம் "அக்கா! நாளைய தினம் தேவதைக்குப் பூசை போட்டுப் புதையல் எடுக்கவேண்டிய விஷயத்தை யறியப்போகிறானும். குடுகுடுப்பாண்டி இருப்பிடத்திலேயே இதைச் செய்வதா! நம் வீட்டிலேயே செய்வதா! என்று கேட்கிறான்.'' என்றான். அங்கச்சி அவன் வீட்டிலேயே செய்வதென்று உத்திரவிட்டாள்.

சோமு:—அக்கா! புதையல் எடுக்கும் நாள் சமீபித்து விட்டது. இனியாவது என் விவாகத்தைப் பற்றி என்ன சொல்கிறாய்? உனக்குத் தயவிருந்தால் இத்தனை நாளைக்கே நடத்தி இருக்கலாமன்றோ! நானும் வீட்டோடு இருக்கலாம். இதற்கென்ன ஏற்பாடு செய்தாய்?

அங்கச்:—அட பைத்தியமே! இதற்கு வழி எனக்குத் தெரியாதா! அந்த திலகவதி எங்கே போனாள். நான் எங்கே போனேன். உன் கல்யாணத்தைப் பற்றி நான் கவனிக்காமலில்லை. கட்டாயம் முடித்து விடுகிறேன். அவளை எதற்காக வைத்து வளர்க்கிறேன் தெரியுமா! உனக்காகத்தான். எந்த விதத்திலாவது உனக்கு அவளைக் கொடுப்பது என் கடமை. இது சத்தியம்.—என்று வெகு அட்டகாஸமாய்க் கூறினாள். இதைக் கேட்ட சோமு அங்கம் பூரித்தான்.

சில காரியத்திற்குப் பலமான தடைகளேற்பட்டால்தான் அதற்கு ஜெயமுண்டு. இல்லையேல் அதற்கு பலங்குன்றி விட்டதாகும். அதே போல மகாத்மா ஆரம்பித்திருக்கும் "தீண்டாமை விலக்கு" காரியமும் இருந்து வருகின்றது.

அச்சமயம் மாலை 4 மணி இருக்கும். அப்போது அங்கச்சியம்மாள் (டீ) தேயிலைப் பானம் செய்யும் நேரமாதலால் திலகவதி அதை எடுத்துக்கொண்டு இங்கு வருகையில் இம்மொழிகள் அவள் காதில் விழுந்தன. அவ்வளவுதான் "ஐயோ! எனக்கு இந்தவித ஏற்பாடும் ஒன்று நடந்து வருகிறதா? அம்மன் கோயிலுக்கு ஆட்டுக்கடா பலி கொடுக்க வளர்ப்பதைப் போல என்னை இந்த துராத்மாவினிடம் தள்ளுவதற்காகவா வளர்க்கிறாள்! ஆ! கடவுளே! இந்த அபாயத்திலிருந்து என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று எண்ணிக் கலங்கிப்போய்ப் பிரமித்துவிட்டாள்.

9-வது அதிகாரம்

ஆடு, கோழியுடன் ஆசை நர பலி வேண்டும்

விடியற்காலம் சிலு சிலுப்பான காற்று வீசுகிறது. மணி 4 தான் இருக்கும். குடுகுடுப்பாண்டி வழக்கம் போலப் பாடிக்கொண்டே வந்தான். அன்று அங்கச்சியம்மாள் அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். குடுகுடுப்பைக்காரன் வெகு மெல்லிய குரலால் அங்கச்சியம்மாளிடம் "தாயே! இன்று சரியாகப் பகல் 12 மணிக்கு தேவதைக்குப் பூசை போடுகிறேன். அதற்கு அதிக செலவு எதுவுமில்லை. 50 ரூபாய்க்குள் ஆகிவிடும். ஒரு கோழி மட்டும்தான் பலி கொடுக்கவேண்டும். இந்த ஜாபிதாவில் கண்டபடி எல்லாம் நீங்கள் வாங்கிக்கொண்டு வந்தாலும் சரி! நான் வாங்கிவிட இந்த

இயக்கம் மயக்கமடைந்து விட்டதென்று சிலர் தியக்கமின்றிக் கூறுகிறார்கள். அது வியக்கத் தக்கதே. இந்த இயக்கம் மயக்க மடைந்ததற்கு முட்டுக் கட்டைகள் தாங்கள்தான் என்பது அவர்கள் மண்டையில் உறைப்பதில்லை.

நாயிக்கு அனுமதித்தாலும் சரி; இன்று முதல் வேலையைத் தொடங்கி விடலாம்.'' என்றான்.

உடனே அங்கச்சியம்மாள் மடியிலிருந்து 50 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து "அப்பா! நீயே வாங்கிக்கொள்ளு. நான் 12 மணிக்கு அங்கு வந்து சேருகிறேன். ரகஸியம்; ரகஸ்யம். பத்திரமாகச் செல்லு'' என்று கூறி யனுப்பிவிட்டாள். குடுகுடுப் பாண்டியும் போய்விட்டான்.

பகல் 11-30 மணிக்கு அங்கச்சியம்மாள் தயாரானாள். சோமு வந்து சேர்ந்தான். ஒரு மோட்டாரில் ஏறிக்கொண்டு குடுகுடுப் பாண்டி சொல்லிய விலாசப்படிக்கு அந்த இடத்திற்குச் சென் றார்கள். இவர்களின் வீட்டிற்கு வெகு தூரத்தில் அந்த இடம் இருக்கிறது. அது ஓர் சிறிய கூரைக் குடிசையாகக் காணப்பட் டது. குடுகுடுப்பாண்டி ஸ்நானம் செய்துவிட்டு, பெரிய குங்கும மிட்டுக்கொண்டு வெகு மடியாக நின்றான்.

இவர்களைக் கண்டதும் மரியாதையாக வரவேற்று, ஓர் மணை யில் உட்காரவைத்தான். "இந்த ஏழைப் பிச்சைக்கார நாயின் குடி சைக்குத் தங்களைப் போன்ற பெரியார்கள் வருவதற்கு இந்தக் கழுதை என்ன புண்ணியம் செய்ததோ!'' என்று அபாரமாகத் தோத்திரம் செய்தான். இவர்களுக்குக் குடிக்க இளநீர் கொடுத் தான். ஆரஞ்சி பழம் கொடுத்தான். பிறகு "அம்மா! தைரிய மாக விருங்கள்; பயப்படவேண்டாம்.'' என்று கூறிப் பூஜைக்குத் துவக்கினான்.

பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் தடபுடலாகச் செய்திருக் கின்றன. குடுகுடுப்பையை அடித்து வர்ணித்து "தாயே! ராமக்கா! திம்மக்கா! பொம்மக்கா! நீ மகா சாந்தமாக இங்கு வந்துள்ள அம்மாளுக்குக் குறி சொல்லடி தாயே! மலையாள பகவதி! மலையாள

எப்போதும் கோணங்கிக் கூத்தடிக்கும் விளையாட்டுப் புத்தி யுள்ளவர் களுக்கு எத்தனை சொன்னாலும் உரைப்பதே இல்லை. அத்தகைய சோண கிரிகள் வீட்டிற்கு சோதாக்கள், வெளிக்குப் பரம சாதுக்கள்.

பகவதி! அந்த புதையல் விஷயமாகச் சொல்லடீ! உனக்கும் மற்ற தேவதைகளுக்கும் என்ன செய்யவேண்டுமடீ! தாயே! அம்பிகே! பகவதி!'' என்று கூறிக் கற்பூரம், தீபம், தூபம் முதலியன காட்டினான்.

அங்கு குடுகுடுப்பாண்டியின் மனிதர்களில் நான்கு பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பூஜை போடும் இடத்தில் ஓர் முடாவைக் கவிழ்த்து அதற்கு மாலை முதலியன போட்டுக் குங்குமம் சந்தனம் பூசி அலங்காரம் செய்திருந்தது. இந்த தடபுடல் பூஜையைக் கண்டு அங்கச்சியம்மாள் உள்ளம் பூரித்துப் போகிருள். இப்போதே புதையல் கைக்கு வந்துவிட்டதாகவே எண்ணி அளப்பரிய சந்தோஷத்தை அடைகிருள். சோமுவும் அதற்குமேல் பூரிக்கின்றுன்.

குடுகுடுப்பாண்டி ஆடம்பரமாக வர்ணிக்கும்போது அங்கு மத்தியில் இருக்கும் பானை இப்படியும் அப்படியும் ஆட வாரம்பித்தது. இது அங்கச்சியம்மாளின் ஆச்சரியத்தை உடனே அதிகப்படுத்தியது. ''ஆ! என் நஞ்சான் குஞ்சான்களா! குடுகுடுபாண்டீ! நான் ப்ரஸன்ன மாகிவிட்டேன். அந்த அம்மாளை எழுந்து நிற்கச் சொல்லு. கன்னத்தில் அறைந்துகொண்டு வணங்கச் சொல்லு. நான் புதையல் விஷயத்தில் உதவி செய்கிறேன். அடே குடுகுடுபாண்டீ! புதையல் எடுக்கும்போது எனக்கு நரபலி ஓணம். அந்த அம்மா கொடுப்பாளா! கேளு! கேளு!'' என்று ஒரு குரல் கேட்டது.

இந்த வார்த்தையைக் கேட்ட அங்கச்சியம்மாள் வெகு பய பக்தியோடு எழுந்து 'பட்டார், பட்டார்' என்று கன்னத்தில் அறைந்துகொண்டு பல தடவை விழுந்து வணங்கினுள். ''ஏ! தேவதையே! உன்னுடைய விருப்பப்படியே செய்கிறேன். உனக்குக் குறைவிலாத பூசை போடுகிறேன். ஒரு விதமான ஆபத்தும் இல்லாது என்னுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்'' என்று வேண்டினுள்.

பொறுமை என்ற நெருப்புக்குக் கலகம் என்ற காற்று கூடக் கலந்து விட்டால் என்னவாகும்? சொந்த மனிதராயினும் ஒன்றே, அன்னியராயினும் ஒன்றே! அத் தீயினல் பொசுக்கி த்வேஷத்தை உண்டாக்கிவிடும்.

அசரீரி வாக்காகப் பேசும் தேவதை, "ஹா! சந்தோஷம் சந்தோஷம். உனக்கு நான் ஒன்றும் தீங்கு செய்யவில்லை. இந்த புதையல் எடுக்கும் விஷயத்தில் முதலில்தான் பணச் செலவாகும். இன்று முதல் நான்கு, ஐந்து வாரம் வெள்ளியும், செவ்வாயும் அந்த இடத்திற்குச் சென்று கோழியும், ஆடும் பலி கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். கடைசியில் புதையல் எடுக்கும் நாளில் நர பலி கொடுக்கவேண்டும். அதற்குச் சேர்ந்தாப் போல இன்னும் ரத்தச் சாதங்கள், மாமிசங்கள், பூசனிக்காயில் நூறு கடைசீ நாளன்று உடைக்க வேண்டும். அதோடு அன்று மாத்திரம் 10 ஆடு, 20 கோழி நரபலியுடன் கொடுக்கவேண்டும். நீ சொன்ன வார்த்தை யைத் தட்ட மாட்டாயா?" என்று கேட்டது.

"தட்ட மாட்டேன்; தட்டமாட்டேன்!" என்று அங்கச்சியம் மாள் பெரியதோர் சத்தமிட்டுச் சன்னதங் கொண்டவள் போலச் சொன்னாள். அதன் பிறகு படையல் முதலியன செய்ததும் குடுகுடுப்பைக்காரன் மீதே சன்னதம் வந்துவிட்டது. "ஹா! ஹா! பகவதீ! அம்பிகே! தாயே! கோபிக்காதேயடீ! அம்மா! கோபிக் காதே!" என்று கூத்தாடிக் கீழே விழுந்தான். அருகிலுள்ளோர் ஜலங் கொட்டி மூர்ச்சை தெளியச் செய்தார்கள்.

பிறகு அங்கச்சியம்மாளுக்கு "வீட்டிற்குப் போகலாம்!" என்று உத்திரவு கொடுத்தான். "தாயே! நான் இன்னும் இரண்டு மூன்று தினத்தில் வருகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம்." என் றான். அங்கச்சியம்மாளும், சோமுவும் 'சரி' என ஒப்புக்கொண்டு போய்விட்டார்கள். இவ்விருவருக்கும் அன்று அபார சந்தோஷம் உண்டாகி விட்டது. தேன் குடித்த நரிபோல இருவரும் பல்லைப் பிளந்துகொண்டு அட்டகாஸமாகப் பேசலானார்கள்.

இவர்களுடைய சந்தோஷத்தில் வண்டியோட்டி ஓர் அன்னி

கண:—ஏண்டி! இன்று காலக்ஷேபம் வெகு நன்றாயிருந்ததே உனக் குப் பிடித்ததா?

மனை:—ஏன் கேக்ரங்கோ! பாகவதரின் பட்டையான சரிகை உரு மாலும், காது கடுக்கனும், வைர மோதிரமும் பளபளபளபளபளபள

யன் இருக்கிறானே என்பதையும் மறந்துவிட்டார்கள். உடனே அது நினைவிற்கு வந்தது. ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அங்கச்சியம்மாளுக்குக் கோண வழிகளில் யோசனை செய்யும் சாமர்த்தியம் அபாரமாக விருக்கிறதாகையினால் அவள் உடனே வார்த்தையை மாற்றி "அந்தக் கதையின் விஷயங்களைப் படிக்கும்போதே அவை நேரில் நடப்பது போன்ற உணர்ச்சிகள் தோன்றுகின்றன.'' என்று கதையைப் பேசி வண்டி யோட்டியை ஏய்த்துவிட்டாள்.

புதையல் கிடைக்கும் காலம் நெருங்கிவிட்டது என்ற சந்தோஷத்தினால் அங்கச்சியம்மாளின் முகத்தில் புதிய தேஜஸும் நூதன உணர்ச்சியும் தோன்றின. இரண்டு நாளாயிற்று.

சோமு:—அக்கா! அன்று தேவதைக்கு நர பலி கொடுப்பதாகக் கூறிவிட்டாயே! அதற்கு யாரைப் பிடித்திருக்கிறாய்?

அங்:—பிடிப்பதென்ன? இத்தனை வருடமாகச் சோறு போட்டு வளர்க்கும் திலகவதி இருக்கையில் கவலை எதற்கு?

சோமு:—என்ன அக்கா! என்னை ஏமாற்றப் பார்க்கிறாயே! திலகவதியை எனக்கு மணம் செய்து கொடுப்பதாகச் சொன்ன வாக்கை மறந்துவிட்டாயா! அவளைப் பலி கொடுக்க உள்ளுக்குள் தீர்மானித்து விட்டு மேலுக்கு எனக்குக் கண்ணைத் துடைத்தாயா!

அங்க:—சோமு! உனக்குச் சொன்னது வாஸ்தவந்தான். நம்முடைய உயர்தரமான வம்சத்திற்கும் இனிமேல் நமக்கு வரப் போகும் பதவிக்கும் அந்த சம்மந்தம் சற்றும் சரியில்லை. அந்த பெண்ணின் பிறவி இன்ன தென்று உனக்குத் தெரியுமா! அது மிகவும் கேவலமானது. அதை விவாகம் செய்வதைவிட அவளை விடப் பன்மடங்கு அழகுடைய பெண்ணை மணம் செய்விக்கின்றேன். நமக்குப் புதையல் வந்து விட்ட பிறகு ஏராளமான பணத்

பளவென்று என் கண்ணைப் பறித்து விட்டதன்று. பாகவதரின் உயரத்திற்கும், பருமனுக்கும், அந்த நகைக்கும், பட்டுக்கும் அடாடாடாடாடாடா! ....(இத்தகைய மூடர்கள் உலகில் இன்னுமிருக்கிறார்கள்.)

தைச் செலவிட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டால்—சிலருக்கு டின்னர் பார்ட்டிகள் கொடுத்து விட்டால்,—சுலபமாக பகதூர் பட்டங்கள் உனக்குக் கிடைத்துவிடும். அதற்குத் தக்க சம்மந்தம் செய்து கொண்டால் போகிறது. இந்த சனியனுக்கு ஏன் இத்தனை பதவி?

சோமு:—அக்கா! நான் இந்த ஏற்பாட்டிற்கு ஒத்துக் கொள்ளவேமாட்டேன். நான் வெகு நாட்களாக எதிர்பார்க்கும் திலகவதியேதான் எனக்கு வேண்டும். என்னை நீ மோசம் செய்யப் பார்த்தால் உன் வேலைக்கு மோசத்தை நான் தேடிவிடுவேன். ஏன்; அந்த கிழவி கிடக்கிறாளே; அவளை யேன் பலி கொடுக்கலாகாது. எல்லா விதத்திற்கும் அனுகூலமாகி விடுமே!

அங்க:—(சற்று யோசித்து, ஏண்டாப்பா! நம்மிடம் வேலைக்காரியாகவிருக்கும் சிறுக்கியைப் போய் நீ மணந்து நமது லக்ஷாதிபத்யத்தில் அவளையும் சமமாக அனுபவிக்க விடுவது தகுமா! குமாரசாமியின் புதல்வி குட்டி இருக்கிறாள் பாரு. அவள்மீதுதான் எனக்குக் கண் உண்டு. அவர் ஸர் பட்டம் பெற்றவர்; பெரிய வக்கீல், சரியான சம்மந்தமாகும். இந்த மூதேவி எதற்கடாப்பா!'' என்று கூறி, குடுகுடுப்பாண்டி விஷயமாகப் பேசிக்கொண்டே இருக்கையில் கணபதி "என்ன செய்தி? குடுகுடுப்பாண்டி என்றாயே! என்ன! பூசை என்ன? திலகவதியைப்பற்றி என்ன பேசினாய்?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு இவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக வந்து விட்டார்.

இவர் குரலைக் கேட்டதும் திடுக்கிட்ட அங்கச்சியம்மாளுக்குத் தான் கூறிக்கொண்டிருந்த விஷயத்தையே அவர் கேட்டுக் கொண்டு வந்துவிட்டதை யறிந்ததும் முகம் பிணம்போலச் சோபை யற்று விட்டது. அகத்தினழகு முகத்தில் பிரகாசித்தது. தான்

ஒருவருக்கு பிறர் மீதுள்ள க்ஷாத்திரத்தையோ, ஸ்நேகத்தையோ மறைக்க முடியவே முடியாது. அவர்களுடைய வாக்கினாலோ, செய்கையினாலோ அல்லது பார்வையினாலோ உள்ளத்திலுள்ளது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிடும்.

இதற்கு என்ன பதில் பேசுவதென்று அறியாது திப்பிரமை கொண்டு நின்றுவிட்டாள்.

"இந்த விஷயத்தை அவர் அறியாதிருக்க வேண்டி எத்தனையோ சாமர்த்தியமாய், தந்திரமாய் இத்தனை நாள் இருந்தும், இன்று இப்படி யகப்பட்டுக்கொண்டோமே!" என்று இவள் விழிப்பதை யறிந்த கணபதி "ஏன் பயப்படுகிருய்? உள்ள விஷயத்தைக் கூறு." என்ருர்.

அங்க:—(வாயைக் கூட்டிக் குழைத்து) உம்....உம்....என்று சுரங்கள் இழுத்தவாறு தனக்குள் ஓர் யோசனை செய்துகொண்டு ஒன்றுமில்லை. இன்று விடியற்காலம் ஓர் குடுகுடுபாண்டி இந்த வீதியோடு சென்ருன். அப்போது ஏதேதோ அவச்சொல்லைப் பாடிக் கொண்டே போனன். 'ஓர் சின்ன பெண்ணுக்கு ஆபத்து இருக்கிறது!' என்று பாடினன். அதைக் கேட்டு எனக்குக் குடல் நடுங்கி விட்டது. அந்தப் பாவியின் வாய் என்னவாகுமோ! சின்னப் பெண் இந்த வீட்டில் யார் இருக்கிருர்கள்? திலகவதி மட்டுந்தானே இருக்கிருள். என்ன செய்வது? அனுதைச் சிறுமிக்கு என்ன வந்து விடுமோ என்று பயப்பட்டு அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். வேறு ஒன்று மில்லை" என்று சமயோசிதமாகக் கூறினள்.

கணபதி:—அட பைத்தியமே! இதற்குப் பயமென்ன? பிச்சைக்காரப் பயல்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ உளறினல் அதற்குப் பயப்படுவானேன்? இத்தகைய படவாப் பயல்களை வீதியில் பார்க்கும் போதே நன்ருக உதைத்து விரட்டவேண்டும். பிச்சைக்காரப் பயல்களின் வாக்கு பெரிய தேவ வாக்கு என்று எண்ணிவிட்டாயோ! அடேயப்பா! அதிலும் திலகவதியைப் பற்றி நீ பெரிதாகக் கவலைப்பட்டு உருகுகின்ருயே! ஏதேது. திலகவதிக்கு இதனல் நற்காலம் பிறந்து விட்டதா! ஏன் சோமு இங்கு அடிக்கடி வருகிருன்?—என்ருர்.

ஒருவருக்கு நம்மாலான உதவி செய்வோமென்று நினைத்து ஒருவரிடம் சிபார்சு செய்வதற்காகப் பல தரம் அலைந்தும் அவரைக் காண முடிகிறதில்லை. அதனுல் நாம் ஏதோ அசிரத்தையாக இருப்பதாக நினைக்க இடமுண்டாகின்றது.

அங்க :—(சற்று கோபத்துடன்) அப்படித்தா னிருக்கிறது காலம். உடன் பிறந்தவள் ஒருத்தி இருக்கையில் அவன் வருகிறுன். நான் கண்ணை மூடிய பிறகு அவன் 'இங்கு வா! வா!' என்று அழைத்தாலும் வருவாஞ? அவன் என்ன உங்கள் சத்ருவா! உங்களுக்கு மூன்று விட்டு, நான்கு விட்டுப் போன உறவுகள் எல்லாம் வீட்டுக்கு வருவது சகஜம். என்னுடன் பிறப்பு இவன் ஒருவன் இருப்பது உங்கள் வயிறு எரிகிறதா!'' என்று பலத்த சண்டையிட்டுத் திட்டியவாறு, புலம்ப வாரம்பித்து விட்டாள்.

பிடாரிகளை மணந்தவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! கணபதி என்ற பெயருக்கு ஏற்ப விவாகமாகாமல் இருக்கலாகாதா! கணபதியின் மானத்தை வாங்கக் காளிபோலக் கிளம்பிவிட்டாள்! அந்த சமயம் அவர் பதில் பேசிஞல் மானக்கேடு என்று எண்ணிப் பேசாது போய்விட்டார். இந்த பிசாசும் அடங்கி விட்டது. சோமுவுக்கும் அங்கச்சிக்கும் பலி கொடுக்கும் விஷயத்தில் அபிப்பிராயபேதம் உண்டாகி விட்டது. தனக்குப் பணம் வந்தால் போதும் என்று எண்ணிக் கிழவியைப் பலி கொடுப்பதென்றே தீர்மானித்தார்கள்.

வார வாரம் பலி கொடுப்பதற்கும், பூஜை செய்வதற்கும் குறைந்தது ஒரு வாரத்திற்கு 25 ரூபாயாவது செலவாகும். அதற்கு முதலில் பணத்திற்கு என்ன செய்வதென்று அக்காவும் தம்பியும் யோசித்தார்கள். கணபதியின் பெட்டியிலிருந்து நோட்டுக்களாயும் ரொக்கமாயும் இருந்தவற்றைக் களவாடி எடுத்துக் கொண்டு அதற்குத் தக்க சூழ்ச்சி செய்து திருடன் கொண்டு போய் விட்டதாக ஸ்தாபித்து விட்டாள்.

* * * * * *

கட்டுக் கடங்குமோ காதல் வெள்ளம்! சுகுமாரன் அந்த கடிதத்தைக் கண்ட நாள் முதலாக ஏங்கி மனம் வாடி மெலிய வாரம்பித்தான். "திலகவதியின் ரகஸியந்தான் என்ன! ஏன் அவள் மனம் இத்தனை வெறுப்படைந்து விட்டது? இப்போதுள்ள இம் மனிதர்கள் யார்?'' என்ற கேள்விகள் அவன் மனத்தில் பலமாக உதித்தன. அவனுல் சில தினங்கள் கூடத் திலகவதியின் அழகிய வதனத்தைக்

காணாதிருக்க முடியவில்லை. அவன் ஓரே துணிபு கொண்டு எந்த விதத்திலாவது திலகவதியைச் சந்திப்பதையும், அவளை அடைவதையும் நாம் முயற்சிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். திலகவதியின் வீடுள்ள வீதியில் உலாவுவது, விநாயகர் கோயிலின் அருகில் நின்று கவனிப்பது. இவ்விதமே சில தினங்கள் வரையில் தவித்தான்.

பிறகு ஒரு தினம் திலகவதிக்குத் தன்னுடைய நிலைமையை வெளியிட்டுக் கதறி ஒரு கடிதமெழுதி அதைக் கையில் வைத்துக் கொண்டே வீதியில் பித்தன் போல வெகு நேரம் திரிந்தான். அப்போது திலகவதி எச்சில் இலையை எறிவதற்காக வீதியில் வந்தாள். அதுவே சமயமென்று அந்த கடிதத்தை வீதியில் எறிந்து விட்டு நின்றான்.

சுகுமாரனுடைய பரிதாபத்தைக் கண்டு சகிக்கக் கூடாத திலகவதிக்குக் கண்ணீர் பெருகி விட்டது. கடிதத்தை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு போய்ச் சமையலறையில் ஓர் மூலையில் பதுங்கியவாறு படித்தாள். அது பின் வருமாறு:—

"கண்மணி! திலகவதீ! உனது நிர்த்தாக்ஷண்யமான கடிதத்தைக் கண்ணுற்ற நாள் முதல் என்னுள்ளம் எமனுடன் வாதாடுகின்றது. ஏற்கெனவே நான் உன்னிடம் சத்யம் செய்து கொடுத்திருப்பது உனக்கு நினைவிருக்கலாம். நான் என்னுடைய உயிரையும் உன் விஷயத்தில் த்ருணமாக மதிக்கக் கூடியவன். உன்னுடைய அழகிய கமலம் போன்ற முகத்தைப் பாராதிருக்க என்னால் முடியவில்லை. அந்த விஷயத்தில் நீ எனக்கு உயிர்ப்பிச்சை யளிக்கவேண்டும். என்னுடைய தாயாரின் பரிதாபத்தை நோக்கியேனும் என்னை நீ சந்திக்கும் வழியைச் செய்ய வேண்டும். இல்லையேல் நான் கூடிய சீக்கிரம் இவ் வுலகை விட்டு மறைய நேரும். நான் பித்தன் போல எழுதுவதற்கு மன்னிப்பாயாக. இதற்குப் பதிலை நீ இன்று மாலையில் உன் வீட்டு வீதியிலேயே வைத்துக் கொண்டிரு. நான் பெற்றுக் கொள்கிறேன்.

இங்ஙனம் உன்னைக் கனவிலும் மறவாத

சுகுமாரன்."

2|00|

அதைப் படித்தாள். அவளுடைய மனத்தில் ஏற்கெனவே குடிகொண்டிருந்த விசனத்தை விடப் பன்மடங்கு அதிகரித்து விட்டது. தான் எவ்விதம் இதற்குப் பதில் எழுதுவதென்று வெகு நேரம் யோசனை செய்தாள். அவளுடைய மனத்தில் ஏற்கெனவே உள்ள விஷயத்துடன்கூட, அன்று அங்கச்சியம்மாளுக்கும் சோமுவுக்கும் நடந்த சம்பாஷணையின் விபரீதச் செய்தி அவளுடைய நினைவிலேயே தோன்றி திடும் திடும் என்று திடுக்கிடச் செய்து கொண்டே இருக்கிறது. இத்தனை நாள் தான் அநுபவித்ததைவிட ஆயிரம் மடங்கு அதிகரித்த துன்பம் இனிமேல்தான் தனக்கிருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டதும் அவளால் தாங்கக்கூடாத துக்கம் உண்டாகியது. இவ் விஷயத்தை சுகுமாரனிடம் தெரிவித்தால் என்ன நினைப்பாரோ என்ற அச்சமும் பாதிக்கிறது. இத்தகைய குழப்பத்துடன் பலவிதமாக யோசனை செய்து ஒரு விதமான முடிவுக்கு வந்து விட்டாள்.

உடனே ஒரு கடிதம் எழுதித் தன் மடியில் வைத்துக் கொண்டாள். மாலை மணி 5 அடித்தது. சுகுமாரன் ஏதோ ஒரு சாக்கை வைத்துக்கொண்டு வீதியில் கட்டாயம் வருவான் என்று அவளுக்கு திட்டமாகத் தெரியுமாதலால் வீதியை ஜன்னலால் பார்த்துக் கொண்டிருந்தாள். சுகுமாரன் வீதியில் சிறிது தூரத்தில் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்து வீட்டருகில் வருகையில் இக் காகிதத்தை ஜன்னல் புறமிருந்தே வீசி எறிந்தாள். அதே சமயம் "என்னடீ! எதை விட்டெறிந்தாய் வீதியில்?" என்று கேட்டுக் கொண்டே அங்கச்சியம்மாள் உள்ளே வந்தாள். சுகுமாரன் அக் காகிதத்தை நிமிடத்திற்குள் எடுத்துக்கொண்டு மறைந்ததை அங்கச்சியம்மாள் பார்த்துவிட்டாள். இதற்குமேல் கேட்க வேண்டுமோ? "நீ எதை வீசி எறிந்தாய்! எதை எறிந்தாய் சொல்லு; சொல்லு." என்று பிடித்துக் கொண்டாள். இந்த அம்மாள் இந்த அல்ப காரியத்தில் கூடத் தனக்குச் சத்ருவாக வந்து விட்டதை எண்ணித் திலகவதி மிக்க மன அதிர்ச்சி கொண்டு நடுங்கிவிட்டாள். அதே நிமிடம் சோமுவும் அந்த அறைக்கு வந்து சேர்ந்தான். சாக்ஷாத் எமஸ்வரூபம் போலவே சோமுவின் உருவம் திலகவதிக்குத் தோன்றியது. முன்னிலுமதிகரித்த அபாரமான திகிலும் கலக்கமும் அடைந்து விட்டாள்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI" OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

பரிசுகளின் விவரம்

இம்மாதம் 24-தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.	
1.	15.	D. 12.	Mr. D. Daniel Pillai, Durban.
2.	10.	J. 17.	,, S. Jainalabdin, Mandalay.
3.	10.	N. 157.	,, M. Y. N. Narayanan Chettiar, Karaikudi.
4	5.	S. 550.	,, G. Sanjeevi, Saigon.
5.	5.	K. 257.	,, K. K. S. Kailasam Achari, Halgranoya (Ceylon)
6.	5.	AG. 14.	,, P. A. Parameswara Iyer, Manantoddy.

ஐந்து ரூபாயில் இரண்டு பரிசுகள்

மே மீ 25 தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு ஐந்து ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். குறைந்தது ஒரு புதிய சந்தாவைச் சேர்த்தனுப்புபவர்களின் பெயர்களும் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

மகான் அரவிந்தர்

மனைவியாருக்கு எழுதிய கடிதம்

புதுச்சேரியில் தவராஜ யோகியாக விளங்கும் மகான் அரவிந்த கோஷ் சுமார் இருபதாண்டுகளுக்கு முன் தமது மனைவியாருக்கு எழுதிய அரிய கடிதம் இந்நூலில் அடங்கியிருக்கிறது. இதில் அரவிந்தர் பெருமை, அவரது அற்புத தேசபக்தி, சிறந்த தெய்வ பக்தி, மாதர் கடமை யாதியன விளங்கும். சிறந்த காகிதத்தில் பெரிய கொட்டை யெழுத்துக்களில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டணாத் தபால் தலை அனுப்புவோருக்கு ஒரு பிரதி அனுப்பப்படும்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்



குளிர்காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு, தலைவலி காயம், தாடை வலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி, கட்டி, நரம்புநோய், பாரிச வாயு, கீல் வாயு, புண், பல் வலி ரணம் கக்குவாய் இருமல் முதலியவைகளுக்கும், இன்னும் பலவித நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம்

அமிர்தாஞ்சன் டிபோ

சென்னை கல்கத்தா பம்பாய்